

உ
சிவமயம்

சைவ வித்தியாசாலைகளில்
உபயோகிக்க வேண்டியவை
சபையார்
பாலபாடங்களே

இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

இந்துசாதன
ஆங்கில தமிழ்ப்
பிரசுரங்களை
ஆதரியுங்கள்

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300 of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈசனெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமானது.

புத்தகம் ௫௪] யாழ்ப்பாணம்:— சித்திரபானு ஸூ புரட்டாதிமீ உசுஉ (1942 அக்டோபர் 15 வியாழக்கிழமை) [இலக்கம் ௫௧ 52

சிவஞானபோதநூல்

அச்சுவேலி, சிவஸ்ரீ. ச. குமாரசுவாமிக்குருக்கள்

(முற்றொடர்)

மேற்போந்த காரணத்தானே சிவஞானபோதம் கல்லால் நீழலில் வீற்றிருந்தருளிய ஆதி குருவாகிய சிவபிரானே அருளிச்செய்தாரென்பது குருமரபின் வந்தோர் துணிபார். சித்தாந்தமென்ற பெயர் சிவாகமங்கட்கே உரியது. "சிவாகமங்கள் சித்தாந்தமாகும்" என வரும் திருவாக்கால் அதனை உணரலாகும். எனவே, சிவாகமங்களாகிய சித்தாந்தத்தின் பொருளை நிச்சயித்துரைக்கும் சிவஞானபோதம் குருமரபாற் பெற்று விளக்கியருளிய அருட்குரவர் ஸ்ரீமத் மெய்கண்ட சிவனாவர். மெய்கண்டதேவர் குருமரபாற் சிவஞானபோதத்தைப் பெற்றுத் தமிழில் எமக்களித்தருளினாரென்பது, "போதமிகுத்தோர்" என்ற சிவஞான சித்திப் பரபக்கச் செய்யுளில், "முன்னனிறைவனருணந்திதனக் கியம்ப நந்தி—கோதிலருட் சனற்குமாரற்குக் கூறக் குவலயத்தி னவ்வழியெங்குருநாதன் கொண்டு—நீதகல வெமக்களித்த ஞான நூலைத் தேர்ந்துரைப்பான் சிவஞான சித்தி யென்றே" என அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் விளக்கியருளியதனால் உணரப்படும். இப்பாடலில் 'எமக்கு' என்றது, தமிழ்மக்களாகிய எம்மவர்க்கு என்றபடியாம். ஆதலின், தமிழ் மொழியால் அருளிச் செய்தாரென்பதும், இயம்ப—கூற—கொண்டு அளித்த ஞான நூல் என்பதனால், இயம்பியதும் கூறியதும் வாக்கியத் தொடரால் யாக்கப்பட்ட நூலேயாமென்பதும் பெறப்படும். இதற்குத் தத்துவப் பிரகாசர் செய்த உரை வருமாறு:— "பரமேசுரன்... நந்திகேசுர நாயனார்க் கருளிச்செய்ய, ஸ்ரீ நந்திகேசுர நாயனாரும், சனற்குமார பகவானுக் கருளிச்செய்ய, அம்முறையாலே கேட்டருளிச் செய்து, பிரபஞ்சத்தில் எழுந்தருளி எம்முடைய சுவாமியாகிய மெய்கண்டதேவ நாயனார் குற்றமற்ற தமிழாகச் செய்து, சிவஞானபோதச் சிறப்புத் திருநாமந் தரித்து, எமக்கு அஞ்ஞான நீக்க அருளிச்செய்த இந்த நூலை போதியுணர்ந்து சொல்லாநின்றேன் சிவஞானசித்தி என்னும் பெயரினால்" என்பதாம்.

"என்னைப் பவத்திற் சேரா வகையெடுத் தென்சித்தத்தே
தன்னைவைத் தருளினாலே தாளிணை தலைமேற் சூட்டி
மின்னமர் பொழில்சூழ் வெண்ணெய் மேவிவாழ் மெய்கண்டா
னூல்
சென்னியிற் கொண்டுசைவத் திறத்தினைத் தெரிக்க லுற்றாம்."

எனவும் சித்தியார் செப்புகின்றது.

இத்திருப்பாட்டுக்கு மறைஞான தேசிகர் அருளிச் செய்த உரையில், "வடவேங்கடந் தென்குமரி நடுத்தமிழ் வழங்கும் பூமி பரந்ததாற் காமிக முதலிய இருபத்தெட்டுத் திவ்யாகமங்களை ஆன்மாக்க ளறிதற்குச் சிற்றறிவாதலால், ஸ்ரீ நந்திகேசுர நாயனார் பன்னிரண்டு சூத்திரமாகச் சனற்குமார பகவானுக்கு அநுக்கிரகஞ் செய்தருளினார். அதனைச் சர்வான்மாக்களு மெளிதிலறிந் தீடேறும்படிக்கு ஞானசிந்தாமணியாகிய மெய்கண்டதேவ நாயனார் பார்த்து, "முதனூல் கருத்தளவு மிகுதி பொருள் செப்பித்தோன்" என்னுமிலக்கணத்தால் முதனூற் பெயரிட்டு வழிநூலாக அருளிச் செய்தார். அவர் மாணாக்கராகிய அருணந்திதேவ நாயனார் அம்முன்னூல் வழியே பன்னிரண்டு சூத்திரமாக்கிச் சிவஞான சித்தியெனனுஞ் சிறப்புத் திருநாமஞ் சாத்தித் தமிழாலருளிச் செய்தார். அஃதெக் காரணத்தாலென்னில்;

சீரார் கயிலைத் திருவாய் மலர்ந்த சிவாகமங்கள்
ஓராய் வதுவட சொற்பயின் றோர்க்கெளி தம்மொழியைச்
சாரா தவருமத் தத்துவ ஞானந் தலைப்படுதற்
கோரா தமிழ்ச்செய்யு ளாண்மை யதீர வெழுதுவனே.

(தத்துவ விளக்கம்) என்பதனாலறிக எனக் கூறப்படுதலினாலும்,

ஞானப்பிரகாச தேசிகர் உரையில் "திருவெண்ணெய் நல்லூரின் கண்ணே பொருந்தி வாசம்பண்ணுகின்ற சத்தியதரிசி என்னும் பெயருடைய பரமாசாரியனது வடமொழிச் சிவஞான போதத்தைத் திரித்த தென்மொழிச் சிவஞானபோதத்தை" எனக் கூறப்படுதலினாலும்,

சிவஞான யோகிகள் உரையில் "வெண்ணெய் மெய்கண்டதேவன் மொழிபெயர்த்து வைத்தருளிச் செய்த சிவஞானபோத நூலை, ஏனையாசிரியன்மார் செய்த பிரமாண நூல்கட்கெல்லாம் சித்தாந்தமாகக் கொண்டு, அதனிற் கூறப்படும் சைவாகமப் பொருட் கூற்றை விளக்குவோம், எனக் கூறப்படுதலினாலும்,

சுப்பிரமணிய தேசிகர் உரையில் "மெய்கண்டதேவன் மொழிபெயர்த்து வைத்தருளிச் செய்த சிவஞானபோத நூலை" எனக் கூறப்படுதலினாலும், மொழிபெயர்ப்பென்றே துணியப்படும்.

மேலும், சிவாக்கிரயோகிகள் செய்த சித்தியாருரைக்குப் பாயிரஞ் செய்த பெரியார்,

பார்புகழ் கைலைப் பரமனன் றுரைத்த
திடமிகு வடமொழி யடைவுறத் தெரிந்து
மெய்கண் டிலகுபுனை மெய்கண்ட தேவன்
தென்னூ லாயாற் றெருளுறச் செய்த
முன்னூ லுமம் முறைபெற நிறுவிய
நன்னெறி தருஞ்சிவ ஞான போதத்தை...

எனவும், நிரம்பவழகிய தேசிகரது சித்தியாருரைக்குப் பாயிரஞ் செய்தார்,

எந்தையெம் பெருமான் நந்தித் தலைவர்க்
காதிரண் டாகக் கூறிய வஞ்ஞான்
றினிமைகொ ணந்தி முனியா சனத்தாங்
கருளுபதேசப் பொருளென வறைய
……………………………………… மெய்கண்டானென
நாமந் தோய்ந்த காமங் காய்ந்தோன்
தன்னுழித் தழுவ வந்த நூலை

எனவுஞ் செப்புகின்றார்கள். சித்தியாருக்கு உரைசெய்தாருள் மறைஞான தேசிகர் பரமதநிமிரபானு முதலிய பல நூல்களைச் செய்தவர். சிவாக்கிரயோகிகள் சந்த பரம்பரையில் வந்தவர். சூரியனார் கோயிலாதீனத்து முதற்றலைவர். சைவபரிபாஷை முதலிய கிரந்தங்களை இயற்றியவர். ஞானப்பிரகாசதேசிகர், யாழ்ப்பாணத்துத் திரு

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

தற்கால வானசாஸ்திர பண்டிதர்கள்

The Modern Astronomers

மட்டுவில் திருக்கணிதர்
சி. சுப்பிரமணியஐயர்

கெப்லர்
Kepler

1571—1630

இவர் வுட்டம்பேக் (Wurtemberg) என்னுமிடத்தில் பிறந்தார். இவர் ஓர் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவராயிருந்தாலும் இவரது ஊக்கத்தையும் கல்வித்திறமையையும் அறிந்த இறைமகன் (Duke of Wurtemberg) கல்வி கற்றற்கு வேண்டிய உதவிகளை இவருக்குப் புரிவாராயினர். இவர் டூபிங்கன் (Tubingen University) கலாசாலையில் கல்வி கற்கும் பொழுது கணித சாஸ்திரத்தில் மிகத்திறமை வாய்ந்தவராகக் காணப்பட்டார். M. A. பரீட்சையில் சித்தியடைந்தபின்னர், முதல் கிறாஸ் (Gratz) சர்வகலாசாலையும் அதன் பின்னர் லின்ஸ் (Linz) கலாசாலையிலும் வானசாஸ்திர உபாத்தியாயராக நியமிக்கப்பட்டார். இதன்பின்னர், அநேக வருடங்களாக தைக்கோ பிறஹி என்பவரது குறிப்புகளை நன்கு ஆராய்ந்தபின்னர், கிரகசலனங்களைப்பற்றி மூன்று விதிகளை வெளியிட்டார். அவையாவன:-

(1) ஒவ்வொரு கிரகமும் அண்டாகாரமான வீதியில் சூரியனைச் சுற்றிச் செல்லுகிறது. சூரியன் அவ் அண்டாகார வீதியின் இரு மையங்களுள் ஒன்றிலிருக்கிறது. (2) சூரிய மையத்தையும் கிரக மையத்தையும் இணைக்கும் ரேகையானது சம நேரத்தில் சம அளவுப் பரப்பையே எப்பொழுதும் தாண்டுகிறது. (3) கிரகங்களின் சுற்றுக் காலத்தின் வர்க்கமானது அவற்றின் மத்திய சராசரி தூரத்தின் கனத்திற்குச் சமமாகும் என்பனவாகும்.

இம்மூவிதிகளுள் முதலிரண்டும் 1609லும், மற்றையது 1519லும் வெளிப்படுத்தப் பட்டனவாகும். தைக்கோபிறஹி யென்பவரால் ஆரம்பிக்கப்பட்டவரான நூலானது அவர் இறந்தபின் கெப்லரால் பூர்த்தியாக்கப்பெற்று 1609ல் 'புதியவான நூல்' (New Astronomy) என்னும் பெயருடன் வெளிப்படுத்தப்படலாயிற்று. 1630ல் இவர் ஜுரத்தினால் பீடிக்கப்பட்டிறந்தபின் றரிஸ்பன் (Ratisbon) என்னுமிடத்தில் புதைக்கப்பட்டார். 200 வருடங்கட்குப் பின் இவரின் ஞாபகார்த்தமாக ஓர் கல்லறை அவ்விடத்தில் கட்டப்பட்டது.

கலிலியோ
Galileo

1564—1642

பிஸா (Pisa) என்னுமிடத்தில் 1564ம் வருடம் கலிலியோ வென்பவர் பிறந்தார். மிகக் கீர்த்திபெற்ற விஞ்ஞான பண்டிதர்களுள் இவரும் ஒருவராவர். இவர் வைத்தியக் கல்லூரியில் கற்கும் பொழுதும் கணிதத்திலும் புதுப்புது விஷயங்களை ஆராய்வதிலும் மிக விருப்புடையவராயிருந்தார். இவர் கணிதத்தில் மிகப் பாண்டித்தியம் பெற்றவராதலால் 22ம் வயதில் பிஸா சர்வகலாசாலையில் (Pisa University) கணித உபாத்தியாயராக நியமிக்கப்பட்டார். இவர் ஒருநாள் தேவாலயத்தில் பூஜித்துக்கொண்டிருக்கும் பொழுது அங்கு தூங்கிக்கொண்டிருந்த ஓர் விளக்கினது அசைவின் நேர அளவும், தமது கைநாடியின் அடிப்பின் நேர அள

தொடர்ச்சி 4-ம் பக்கம்

மலாய நாட்டுப் பகுதிகளுக்குப் பார்சல்

அதிகரித்திருப்பதாற் கூடுதலான புகைவண்டி

அண்மையில் மலேப்பிரதேசங்களுக்குச் செல்லும் பார்சல் தபால்கள் அதிகரித்து வருவதால் அவைகளுக்கென்று தனிப் பெட்டிகள் மலேப் பிரதேசத்திற்குச் செல்லும் மெயில்வண்டிகளில் இணைக்க நேரிட்டிருக்கிறது. சென்ற வாரத்தில் மட்டும் தினந்தோறும் 400 முதல் 500 வரை தபாற்பைகள் மலேப்பிரதேசத்திலுள்ள இடங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

சென்ற ஞாயிற்றுக்கிழமை மாலை கண்டிக்குச்சென்ற மெயில் வண்டியில் வழக்கமாகச்செல்லும் தபால் வண்டிகள் போதாமல் மற்றொரு வண்டி இணைக்கப்பட்டு அதுவும் போதாமற்போய்விட்டது. ஏறக்குறைய 100 தபாற் பைகள் கார்கோ வண்டியிற் போடவேண்டியிருந்தது. சென்ற சிலவாரங்களில் இந்தியாவிலிருந்து ஏராளமான ஜவுளிப்பார்சல்கள் வந்திருப்பதால் மலேப்பிரதேசத்திற்குப் பார்சல் போக்குவரத்து இன்னுஞ் சிறிது நாட்களுக்கு அதிகமாகவிருக்குமென நம்பப்படுகிறது.

ஸ்ரீ விவேகானந்த வித்யாலயம் மட்டக்களப்பு

புரட்டாதி மாசம் 30-ம் தேதி புதன்கிழமை மட்டக்களப்பு விவேகானந்தவித்தியாசாலை மாணவிகள் மேற்படி வித்தியாலயமண்டபத்தில் பெற்றோர்தினவிழாக் கொண்டாடினார்கள்.

பிற்பகல் 4-30 மணிதொடக்கம் டாக்டர் P. இராஜசிங்கம் M O H அவர்களின் தலைமையின்கீழ் உபந்நியாசங்கள் நடைபெற்றன. பகுதி வித்தியாதரிசி A. சரவணமுத்து அவர்கள் பண்டிதர் E. பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் K. கணபதிப்பிள்ளை F. R. G. S. அவர்கள் முறையே கல்வி, பெண்கல்வி, சமயக்கல்வி ஆகிய விஷயங்கள் பற்றிப் பேசினார்கள்.

அதன்பின்னர்ப் பெரும்பாக வித்தியாதரிசி திரு. V. K. நாதன் B. A. F. R. G. S. அவர்களின் தலைமையில் காலட்சேபம் நடைபெற்றது.

மாணவிகள் மிக்க திறமையாகக் காரைக்காலம்மை சரித்திரத்தைப் பக்திரசம் ததும்ப நடித்துக்காட்டினார்கள். அதையொட்டி நடிக்கப்பெற்ற ஹாஸ்யமும் உயர்தரமாயிருந்தது. காரைக்காலம்மையின

தொடர்ச்சி 4-ம் பக்கம்

சிவப்பிரகாசர் கவிநயம்

(திருமயிலை, திருவாளர். சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை)

சிவப்பிரகாச சுவாமிகள் அருளிச்செய்த சிறு பிரபந்தங்களுள் "நெடுங்கழி நெடில்" என்பதொன்று. அது பத்துப்பாக்களைக் கொண்டது. வீர சைவ சம்பந்தமானது. அந்நூலைச் சிறிது ஆராய்வாம்.

(1) பெருகுமன்பாற் பூசனைபுரிந்த பிணங்குநூற் சிலம்பி
வெவ்வரவம் பிறைமருப்புமாக் கரயானையென்
றிவற்றின் பிறவியோ விதழ்முறக் கவிழ்ந்து
முருகுமிழ் நறுமென்மலர் புனைந்தன்ன முற்றும் வந்தனை
புரியாமல் முகிழ்முலை மகளிர் மயலிடை
யழுந்து மூடர்தம் பிறவியோ நல்லது?

சிலந்தி, பாம்பு, யானை முதலிய ஜந்துக்கள் சிவபெருமானைத் திருக்காளத்தியில் பூசித்துப் பேறுபெற்றமையைக் குறிப்பித்துள்ளார் ஆசிரியர். சிவபெருமானைப் பூசியாமற் காலங்கழிப்பவரை மூடர் என்று பழிக்கின்றார்.

சிவகருமஞ் செய்யார் திருநீறு சாத்தார்
தவநெறியாஞ் சைவநெறி சாரார்—அவனிதனிற்
கான்பரந்த பச்சைக் களாநிழலைக் கைதொழார்
ஏன் பிறந்தார் மானிடரா யின்று.

என்னுந் திருக்களவை வெண்பா இங்கே கருதற் பாற்று.

(2) கட்டழகமைந்த காளையம் பருவங்கடந்திடா தவ்வளி
யுடைத்துக் கலங்கல்செய் பிணியின் றியன்ற யாக்கை
யாராய்க் கல்வியங் கடல் கடந்தவராய்
நட்டவர் விரும்புமாறு நீ செய்ய நடக்குநாளுடல்
வெறுத்தனையே நம்பியாரூரன் முதலியோர்
நண்ண நாளுடல் விடுமென வழிவேன்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் நல்ல வாலிபராயும் அழகுள்ளவராயும் உனக்குத் தோழராயும் இருந்தவர். அப்படியிருந்தும் அவர் எல்லாவற்றையும் வெறுத்து உன் திருவடியையே விரும்பினர். யானோ இச் சரீரத்தைவிட அஞ்சுகின்றேன் இது என்ன பேதைமை என்றவாறு.

(3) மனமெனும் வயமா என்வயப் படாமல் மயங்குறும்
ஐம்புலவிதி மறிபடா தோடுகின்றது முறையோ
மறித்ததை நிறுத்தி யென்றனக்கு
நினையில துதவுவாரில் யதனால் நினைப்பா யுற்றனன்
அதனை நிறுத்தி நீயிவர்ந்து பின்னர்நீ வேண்டு
நெறிகளிற் சென்றிட விடுவாய்.

மனதைக் குதிரையாகவும் ஐம்புலன்களைக் குதிரை செல்லும் பாதையாகவும் உருவகித்துள்ளமை போற்றத்தக்கது. அக் குதிரையை அடக்கத்தக்க வன்மை படைத்தவர் சிவபெருமானேயாம். ஆதலால், அவரைப் பணிந்தால் மனதை அடக்கிச் சும்மா இருக்கச் செய்யலாம் என்றவாறு.

"சும்மா இரு சொல்லற வென்றலுமே
அம்மா பொருளொன் றுமறிந்திலனே"

என்றது கந்தரனுபூதி.

(4) நிலங்கடந்தவன் முன்னநிமலர் சாத்த நிகரிலம்
மூர்த்தி மூன்சாந்து நினைக்கணிவுற வாட்டாயர்
முன்னிருந்து நிவேதனம் புரிந்திட வந்து
கலங்கிளர் கலையர் கலியர் முன்னுப நல்விளக்
களிப்ப நின்றன்னை ஞானசம்பந்தப் பிள்ளை
முன்பாட நாணினேன் பூசனை புரிவேன்.

திருமால் கண்மலர் சாத்தியும், மூர்த்திநாயனார் சந்தனம் அணிந்தும், அரிவாட்டாயர் மாவடுவை நிவேதிப்பித்தும், குங்குலியக்கலயர் தூபமிட்டும், கலிய நாயனார் திருவிளக்கேற்றியும் திருஞானசம்பந்தர் செந்தமிழ்ப் பாக்களால் துதித்தும் வழிபட்டமையைக் குறிப்பித்துள்ளமை நோக்கத்தக்கது. இவர்கள் புரிந்த பூசனையின்முன் யான் செய்யும் பூசனை போலியாம் என்றபடி.

(தொடரும்)

மகாமகோபாத்தியாய டாக்டரவர்கள்

சில நினைவுக் குறிப்புக்கள்

ராவ்ஸாகிப் ஸ்ரீ வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள், G. B. V. C.

திருத்தக்க தேவர்சிந் தாமணியும் கம்பர்
விருத்தக் கவித்திறமும் வேண்டேம்;—
உருத்தகு
கொங்குவேள் மாக்கதையும் கூறேம்!
குறள் அனுகேம்;
எங்கெழிலென் ஞாயி றெமக்கு.

டாக்டர் ஐயரவர்களது எண்பதாம் ஆண்டு நிறைவுவிழாக் காலத்தில் அவர்கள் நினைவுக் குறிப்புக்களாக யான் எழுதியது, முதலில் 'கலைமக'ளிலும் பின்பு அவர்களது எண்பதாம் ஆண்டு நிறைவுவிழா நினைவுமலரிலும் வெளியாயிருக்கிறது. அந்த நினைவுக் குறிப்புக்களில் அடங்காத சில நிகழ்ச்சிகளை இங்கே தருகின்றேன்.

மிருக வைத்திய இலாகாவில் நான் வகித்திருந்த உத்தியோகத்தின் வேலைத்தலம், சென்னை மாகாணச் சில்லாக்கள் எல்லாமுமே என்று ஐயரவர்களுக்கு யான் தெரிவிக்கும்படி கேட்டபோது, அவர்கள், ஒரு சீட்டில் சில அரிய பழைய தமிழ் நூல்களின் பெயர்களை யெழுதி யென் கையிற் கொடுத்துத் 'தாங்கள் தமிழ்ச் சில்லாக்களில் பிரயாணஞ் செய்யுங் காலங்களில் இந்தச் சீட்டிற் குறித்த ஏடுகளைப் பற்றி விசாரித்து அகப்பட்டவைகளை யெனக்கனுப்பினால், பேருதவியாயிருக்கும் என்று சொன்னார்கள். அவர்கள் கொடுத்த குறிப்பில் முதலாவதாகக் குறித்திருந்தது, கொங்குவேள் மாக்கதை. அவர்கள், கொங்குவேள் மாக்கதை யென்பதும் பெருங்கதை யென்பதும் ஒருநூலே என்றும், அதில் ஒரே ஒரு ஏட்டுச் சுவடிதான் கிடைத்திருக்கிற தென்றும், சிந்தாமணி சிலப்பதிகாரம் மணிமேகலை வளையாபதி குண்டலகேசியென்ற பஞ்சகாவியங்களுள் வளையாபதி குண்டலகேசியென்ற இரண்டு நூல்களின் ஏடுகள் எங்கும் தேடியும் கிடைக்கவில்லையென்றும், அவை யிறந்து போயினபோலுமென்றும், கொங்குவேள்மாக்கதை (பெருங்கதை) யென ஒரு நூலுண்டென்பதை வித்துவான்களுள்ளேயே அநேகர் அறியாரென்றுஞ் சொன்னார்கள்.

டாக்டரவர்கள் குறித்துக் கொடுத்த நூல்களைப்பற்றி யான் விசாரித்து வந்தபோது, பாளையங்கோட்டை வாசியும் இரட்சணிய யாத்திரிக காவிய கிரந்தகர்த்தாவுமான கிருஷ்ணபிள்ளையவர்கள், 'வளையாபதி'யேட்டைச் சிவைகுண்டத்துக்குச் சமீபத்திலுள்ள ஒரு கிராமத்தில (அந்தக் கிராமம் ஆறுமுகமங்கலமென ஞாபகமிருக்கிறது.) தாம் நேரே பார்த்ததாகச் சொன்னார்கள். உடனே, அந்த ஏட்டைத் தருவித்தனுப்புவதினும் டாக்டரவர்களை மகிழ்விப்பது யாதும் இராதென்றெண்ணிச் சிவைகுண்ட வாசியும் பிரபல வக்கீலும் அருங்கலை விநோதரும் என் நண்பருமான சுப்பராய முதலியாரவர்களுக்கு, அந்த ஏட்டைத் தருவித்து எனக்கனுப்பும்படி ஒரு கடிதமனுப்பினேன். அவர்கள், தக்க வித்துவானொருவரைச் சிபாரிசுக் கடிதத்துடன் அனுப்பி, அவ்வேடிருந்த வீட்டுப் பெட்டியிலுள்ள ஏடுகளெல்லாவற்றையும் கவனமாகச் சோதித்துப் பார்வையிடச் செய்ததாயும், அவ்வேடு அகப்படவில்லையென்றும் தெரிவித்தார்கள். அப்போது நான் அடைந்த ஏமாற்றம் இவ்வளவென்று கூற முடியாததாயிருந்தது.

பின்பு, டாக்டரவர்களைச் சந்தித்தபோது வளையாபதியேட்டுக்காக நான் செய்த முயற்சி கைகூடிவிடும் என்பதுபோல நம்பிக்கை தந்து பின் பயன்படாது போனதைத் தெரிவித்தேன்.

அவர்கள் "எனக்குக் 'கொங்குவேள் மாக்கதை' யேடுகொடுத்த கவிராச நெல்லையப்பபிள்ளையவர்கள், அந்த ஏட்டைத் திருப்பியனுப்பும்படி கட்டாயப்படுத்துகிறார்கள். அந்த நூலுக்கு அவர்கள் கொடுத்த ஏட்டுப் பிரதியொன்றே என்வசமிருப்பதனால் அதைச் சரிபார்த்து வெளியிடுதற்கு நீண்ட காலம் வேண்டியிருக்கிறது. கவிராயரவர்கள், அந்த ஏட்டை உடனே அனுப்பிவிடும்படி கண்டிப்பாக எழுதமேலெழுதி விட்டுக்கொண்டிருக்கிறார்கள். என்னால் பொறுத்திருக்க முடியவில்லை. உதட்டுக்குள் உற்ற அமிழ்தத்தை உண்ணாமல் உமிழும்படி நேர்ந்தது போல, அருமையாக அகப்பட்ட ஏட்டைப் பதிப்பியாமல் அனுப்ப வேண்டியிருக்கிறது" என்று வருத்தத்தோடு சொன்னார்கள். நான், 'அந்த ஏட்டைத் திருப்பியனுப்ப வேண்டியதில்லை. நான் திருநெல்வேலிக்குப் போகிறேன். கவிராயரவர்களைக் கண்டு வேண்டியதைச் செய்வேன்' என்று சொன்னேன். சொல்லியபடியே, கவிராயரவர்களைக் கண்டு, 'கொங்குவேள் மாக்கதையேடு புத்தகமாகப் பதிப்பாகுமட்டும் அந்த ஏடு இப்போதிருக்கிறபடியே ஐயரவர்களிடமிருப்பதே நலம். (அதைத் தங்களைக்காட்டிலும் அவர்கள் அதிகப்பத்திரமாக வைத்திருப்பார்கள்). அந்த ஏடு தங்களிடம் வந்தால், வளையாபதி யேடு ஒன்றேயொன்றிருந்தது தவறிப்போனது போலத் தவறி ஒருவராலும் வெளியிடப்படாமலும் உலகத்துக்குதவாமலும் இறந்துபோகக்கூடு'மென்று சொன்னேன். கவிராயரவர்கள் என் வேண்டுகோளுக்கு இணங்கினார்கள். அவர்கள் டாக்டரவர்கள் அச்சிட்ட பெருங்கதைப் புத்தகத்தைப் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சி அளவடங்காததாயிருந்ததாகப் பின் நான் அவர்களைக் கண்டபோது என்னிடம் கூறினார்கள்.

இறந்தொழிவனவாயிருந்த பழந்தமிழ் நூல்கள் பல, டாக்டரவர்களால் அச்சேற்றப்பட்டுச் சிரஞ்சீவிகளாக்கப் பெற்றிருக்கின்றன. அவைகளெல்லாவற்றுக்கும் சில ஏட்டுப்பிரதிகளே இருந்தனவாதலால், அவைகள், அவர்கள் முயற்சியில்லையானால் பெரும்பான்மையாக இறந்திருக்குமாயினும், சிறுபான்மையாகப் பிற சான்றோர் முயற்சியால் உயிர்ப்பித்து நிலைபெற்றிருக்கும். அந்த நூல்களின் ஏட்டுச் சுவடிகள் போலன்றிக் கொங்குவேள் மாக்கதையின் ஏட்டுச்சுவடி ஒன்றேயாக இருந்ததனால் அதன் சாவு ஏனைய எல்லா நூல்களின் சாவிலும் நிச்சயமானதாயிருந்தது. சாகும் நிலைமையிலிருந்த மார்க்கண்டனைச் சாவாது என்றும் வாழும்படி செய்யக்கூடியவரும் செய்தவரும் ஒருவரே. இறக்கும் நிலைமையிலிருந்த கொங்குவேள் மாக்கதையை இறவாமல் என்றும் நின்று நிலவச் செய்யக்கூடியவரும் செய்தவரும் ஒருவரே. முந்திய ஒருவர் சிவபெருமானே. பிந்திய ஒருவர் புலவர் பெருமான் டாக்டர் சாமிநாதையரவர்களே.

—செந்தமிழ்.

விசேஷ விஞ்ஞாபனம்

வருகிற திங்கட்கிழமை (19-10-42) விஜயதசமியும் மானம்பு உற்சவமும் நிகழ்தலின், இந்துசாதன ஆலயம் சைவப்பிரகாச யந்திரசாலை என்னுமிவைகளிற் கருமம்பார்ப்போர்க்கு விடுதலை உதவப்படுமாதலால், அற்றை இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்கள் வெளிவரா.

மனேஜர்.

வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சித்திரபானுஹூ
புரட்டாதிமீ ௨௯ வியாழக்கிழமை

இந்தியாவிலிருந்து அரிசி, நெல் வருமா?

இந்தியாவிலிருந்து ஒரு அளவிற்கு அரிசி நெல் இலங்கைக்கு வருமென்பதுதான் இவ்விலங்கையிலுள்ள மக்களின் நம்பிக்கை. இந்த விஷயமாக இந்தியாவிற்குச் சென்று இப்பொழுது மீண்டுவந்துள்ள இலங்கை அரசாங்கசபை உண்ணாட்டு மந்திரியாகிய ஸேர். பரன் ஜயதிலகையும் தாம் சென்ற கருமம் ஒரு சிறிது அநுகூலமுற்றதாகச் சொல்லுகிறார். ஸேர். பரன் தான் உணவுப்பொருள் விஷயமாக இந்தியாவிற்குச் சென்றமையைப்பற்றிய அறிக்கையொன்றை இப்பொழுது இலங்கை மந்திரிமார் சபைக்குச் சமர்ப்பித்துள்ளார்; அதன் விபரம் இன்னமும் வெளிவரவில்லை; விரைவில் வெளிவருமெனக் காத்திருக்கிறோம்.

இது இப்படியிருக்க, இந்திய பத்திரிகைகளுட்சில, இலங்கை மக்களுக்கு இந்தியாவிலிருந்து அரிசிநெல் உதவக்கூடாதென இப்பொழுதும் வாதிக்கின்றன. இந்திய பத்திரிகையிலொன்றாகிய "மகாராட்டா" என்னும் பத்திரிகை இந்த விஷயமாகப் பின்வருமாறு கண்டித்துக் கூறுகின்றது.

"இந்தியாவிலுள்ள மக்களுள் விசேஷமாக பம்பாய், சென்னை, ஒறிஸா முதலிய பகுதிகளிலுள்ளவர்கள் இலங்கைக்கு இந்தியாவிலிருந்து அரிசி நெல்லென்னு மிவைகளை அனுப்பவொண்ணுதெனத் தடுக்கின்றார்கள்; இவர்கள் தடுப்பது நியாயந்தான்; மேலே சொல்லப்பட்ட மாகாணங்களில் வசிப்போரின் பிரதானமான உணவுப்பொருள் நெல்லரிசியேயாகும். வங்க மாகாணத்திற்கும் நெல்லரிசியே இன்றியமையாததாகும். இந்த மாகாணங்களில் விளையும் நெல் குறித்த மாகாணங்களில் வசிக்குஞ் சனங்களுக்கே உணவுக்கு வேண்டியதாகும்; கோதுமை மேலே சொல்லப்பட்ட மாகாணங்களில் அதிகம் விளைவதில்லை; பாஞ்சாலம் சிந்து என்னும் மாகாணங்களில் விளையும் கோதுமை இந்த மாகாணங்களுக்குத் தருவிக்கப்படுகின்றது. பர்மிய நாட்டிலும் மலாய் நாட்டிலுமிருந்து முந்தி இந்தியாவிற்கு வந்த நெல் அரிசி இப்பொழுது வராதொழிந்தது. இப்பொழுது நெல் விளைவிக்கப்படும் நிலப்பரப்பு அதிகப்பட்டு வரினும், இன்னமும் இந்நாட்டு உணவுக்குப் போதிய நெல் விளைவிக்கப்படவில்லை. இம்மாகாணங்களில் இதுகாறும் நெல்லரிசிச்சோறுண்டுவந்த மக்கள் இனிமேல் உணவை இலகுவில் மாற்றிக்கொள்ள முடியாது. இப்படியெல்லாமிருத்தலால் இந்நாட்டிற்குப் போதிய அரிசி நெல் வைத்துக்கொண்டே எஞ்சியதைப் புறநாடுகளுக்கு அனுப்புதல் முடியும். இலங்கை மந்திரியொருவர் இங்கே இந்த விஷயமாக வந்துபோயிருக்கிறார். இலங்கைக்கு இந்தியாவிலிருந்து அரிசி நெல் ஏற்றுமதி செய்யக்கூடாதென்பதற்கு இன்னுமொரு பிரதானமான நியாயமுண்டு. இலங்கை அரசினர் இங்கிருந்த இந்தியர்களுக்கு மாறுகவிதித்த பிரமாணங்களை இன்னமும் அகற்றிவிட நினைக்கவில்லை. இலங்கையில் வசிக்கும் இந்திய மக்கள் விஷயத்தில் இலங்கை யரசினர் மாறுகவே நிற்கின்றனர்; அந்தத் தடைகளையெல்லாம் அந்நாட்டு அரசினர் அறவே தவிர்த்துவிடும்வரையில் இந்திய மக்கள் தம் நாட்டிலிருந்து இலங்கைக்கு அரிசி நெல் அனுப்பும் விஷயத்திற் சம்மதித்தல் முடியாது. இலங்கையில் இப்பொழுது நிற்கும் இந்திய பட்டாளத்திற்கும் இந்திய மக்களுக்கும் உணவு வேண்டுமேல், அவர்களுக்கு மாத்திரம் அனுப்பிக்கொள்ளலாம்."

இதுவே அந்த இந்திய பத்திரிகை வெளியிட்டுள்ளதாகும். இப்படியான கொள்கையும் நோக்கமும் இந்திய மக்களிடத்தில் இன்னமும் இருக்குமானால் இலங்கை மக்களாகிய நாங்கள் இந்தச்சமயத்திலே இந்தியாவிலிருந்து எங்கள் உணவுக்குப் போதிய அரிசி நெல் வருமெனக் காத்திருப்பது இலவு காத்த கிளியின் நிலைபோலாகுமென்றுதான் எண்ணவேண்டும். இலங்கைமக்களுக்கும் இந்தியமக்களுக்கும் மிடையே துவேஷத்தை அந்தநேரத்தில் உண்டாக்குதற்குக் காரணராயிருந்தவர்கள் மிஸ்ரர் சனநாயக, பண்டாரநாயக போன்ற சிங்கள மந்திரிமாரென்பது மெய்தான்; ஸேர். பரன தம மந்திரிமாரைப் பற்றி எவ்வளவோ சமாதானஞ் சொன்னபோது இந்திய மக்கள் இவர் சொன்ன சமாதானங்களை மனப்பூர்வமாகவேற்றுக்கொள்ளவில்லையென்பது 'மகாராட்டா' போன்ற இந்திய பத்திரிகைகளின் கூற்றைக் கொண்டு அறியக் கிடக்கின்றது. ஆயினும், இந்தியமக்கள் இந்த உணவுப்பொருள் அனுப்பும் விஷயத்திற்கு மாறாக அதிக பிடிவாதமாக நிற்கிறார்களென எண்ண இடமில்லை. இலங்கை அரசினர் முந்தி இலங்கை இந்தியர்கட்கு மாறுகவிதித்த கட்டுப்பாடுகள் எவைகளோ அவைகளையெல்லாம் அகற்றிவிட்டால், இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அரிசி நெல் தொன்மை போலக் குறைவின்றி வந்துசேருமெனக் காத்திருக்கலாந்தானே. ஆனதினால் இலங்கை மந்திரிமார் தாம் முன்செய்த பாவத்திற்குப் பிராயச்சித்தமாக அந்நிபந்தனைகளைத் தவிர்த்து இந்தியரை ஒற்றுமைப்படுத்தி இந்நாட்டிற்குப் போதிய உணவுப் பொருள்களையும் இந்திய கூலிச் சனங்களையும் வரச்செய்வரேல் இலங்கை மக்களுக்கு எவ்வகையான குறையுமில்லையாகும்.

ரூ 20,000 பெறுமதியான 50சத நாணயங்கள்

மட்டக்களப்பில் திருப்பிக் கொடுக்கப்பட்டன

மட்டக்களப்பு அக் 11—

ரூ 20,000 பெறுமதியான 50 சத நாணயங்கள் ஸ்தல பொக்கிஷ காரியாலயத்தில் மாற்றப்பட்டதாகத் தெரிகிறது. பொக்கிஷக் காரியாலய அதிகாரிகள் இந்நாணயங்களைப் பெற்றுக்கொண்டு இவற்றிற்கீடான நாணய நோட்டுக்களைக் கொடுத்தனர். நிதி வருடத்தின் கடைசித் தினத்தில் கூட்டம் அதிகமாக இருந்தமையால் காரியாலயத்தில் 11½ மணிநேர வேலை நடைபெற்றது.

50சத நாணயங்களைச்செலாவணியிலிருந்து நீக்குவதற்கான காலம் அக்டோபர் மாதம் 12ந் திகதிவரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

தேகவியோகம்

சி. நல்லம்மா

சென்ற செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில், இக்காரியாலயத்திற் கடமை பார்க்கும் ஸ்ரீ வெ. சிவசம்புவின் மனைவியாராகிய நல்லம்மா என்பவர் பிரசவகாலத்தில் தம்மைப் பீடித்த நோய் காரணமாக அகாலமரணம் எய்தினர் என்னும் பரிதாபகரமான செய்தியை இங்கு குறிப்பிடவேண்டியவர்களாகின்றோம்.

இவரைப் பிரிந்து வருந்தும் கணவனுக்கும் பெற்றோர் சுற்றமித்திரர் ஆகியோர்க்கும் எமது மனமார்ந்த அநுதாபம் உரித்தாகுக.

உலகம் பலவிதக்கதை

(முற்றொடர்)

இதுதானா உலகத்தியல்பு!

சுந்தரேசுவரன் குமாரசுவாமியை அவன்வீட்டிற் கொண்டுபோய் விடும்வரையும் தன் காதலியாகிய காஞ்சனமாலையின் சக்தித்திறனையும் குணாதிசயங்களையும் வாயில் நீருற எடுத்துச் சொன்னான்; குமாரசுவாமியும் அவன் அவளையிட்டுச் சொன்னவைகளையெல்லாம் பொறுமையோடு "ஓம், ஓம்" என்று கேட்டுக்கொண்டானேயொழிய மாறேதுஞ் சொன்னானல்லன். சுந்தரேசுவரன் குமாரசுவாமியை அவன்வீட்டிற்கொண்டுபோய்விட்டுத்தன்வீடுபோய்ச் சேர்ந்தான். குமாரசுவாமி தனக்குச் சுந்தரேசுவரன் தானாகவே கமலேசுவரியை விவாகஞ் செய்வதாகச் சொன்ன உறுதி வாக்கையும் இப்பொழுது அவனுடைய மனம் மாறுபட்டு நிற்பதையும் நினைந்து நினைந்து கவலைப்பட்டான்; அவனுக்கு அன்றிரவு முழுவதும் உறக்கம் வரவில்லை. "இதுதானா உலகத்தியல்பு" என்று தன்னுள்ளத்தில் யோசித்து ஆச்சரியப்பட்டான். ஆயினும் குமாரசுவாமி தன் தாய் சகோதரர்கட்கு இவைகளைப்பற்றி ஏதுஞ் சொன்னானல்லன். சுந்தரேசுவரனை வெறுத்தானுமல்லன்; காஞ்சனமாலையைப்பற்றித் தவறான எண்ணங் கொண்டானுமல்லன்; எது நடக்கவேண்டுமோ அது நடந்தே தீரவேண்டுமென்ற அந்த ஒருநிச்சயத்தினுல் தன் மனம் ஒருவாறு தேறுதலடையப்பெற்றான்.

"தந்தைசொன்மிக்க மந்திரமில்லை"

"என்ன, நீ இவைகளைப்பற்றிக் கொஞ்சமேனும் சிந்திக்காமலும் முயற்சிக்காமலும் இருக்கிறாய்; காலமும் வேகமாகக் கழிகிறது; எங்கள் மகளுக்கும் பத்தொன்பது இருபது வயசு வரையிலாகிறது; "பருவத்தே பயிர்செய்" என்றபடி அந்தந்தக் காலத்தில் அந்தந்தக்கருமங்களைப் பார்த்து வைக்காவிட்டால் பிறகு நாம் பச்சாத்தாபப்படவேண்டியல்லவா நேரும்; எங்கள் மக்களெனிலோ விரகறியாதவர்கள்; அவர்களுக்கு இப்பொழுது என்னதெரியும்; அல்லாமலும் நாங்கள் எங்கள் பிள்ளைகளைச் செல்வமாய் வளர்த்து வருகிறபடியால் அவர்கள் உலகவிவகாரம் ஏதும் அறியாமலிருக்கிறார்கள்; புத்தகப்படிப்புவேறு; உலகியலறிவுவேறு; நாங்கள் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கருமங்களை அந்த அந்தக்காலத்திலே செய்து வைக்காவிட்டால் பிறகு பிள்ளைகள் எங்களைத்தானே குறைசொல்லுவார்கள்; அல்லாமலும் வந்து வந்து சம்பந்தம் பேசுபவர்களுக்கும் நாம் தீர்க்கமாக ஒருமுறுதிச் சொல்லத்தானேவேண்டும்; நெடுகத் தவணையிடுவதா? உன்னைக்கேட்டு முற்றெடுக்க முடியாவிட்டால், என்மகளை நான் நேரிற்கூப்பிட்டு விஷயத்தைச்சொல்லி ஒருமுறையுங் கேட்கட்டுமா" என்று சிறிது கவலையோடு சிதம்பரப்பிள்ளையார் தம்மனைவியைக் கேட்டார்; "அம்முறையுங் கேட்கலாம்; நீங்கள் உங்கள்பிள்ளையைக் கேளாமல் வேறுயார் கேட்பது; எங்கள்பிள்ளையும் கடவுள்கிருபையால் அறிவுள்ளவள்; விவேகி; ஏதும் பிழையாகச் சொல்லுவாளென்று நான் நினைக்கவில்லை; பிள்ளையைக் கேட்டறியுங்கள்" என்றாள் சிவகாமித்தாய்; "பிள்ளை இப்பொழுது எங்கிருக்கிறாள்" என்று கணவன் கேட்க, "அந்த அறையிலேதான் படித்துக்கொண்டிருக்கிறாள்" என்று பதில்சொன்னாள் மனைவி. சிதம்பரப்பிள்ளை உடனே எழுந்து தம்மகள் படித்துக்கொண்டிருக்கும் அறைக்குட் சென்றார். சிவகாமித்தாய் அடுக்களைப் பக்கம் போய்த் தன் கருமங்களைச் செய்துகொண்டிருந்தாள். தகப்பன் வரக்கண்ட மகள் உடனே இருக்கைவிட்டெழுந்து "ஐயா, இப்படியிருங்கள்" என்று தான் இருந்த நாற்காலியைக் காட்டித் தகப்பனை இருக்கச்செய்துவிட்டுக் கையில் தான் படித்த புத்தகத்தைப் பிடித்தபடி விநயமாக ஒருபுறத்தே நின்றாள்; "என்னடியம்மா செய்கிறாய்" என்று தகப்பன் ஆதரவுடன் கேட்க, "பாடம் படித்துக்கொண்டிருக்கிறேன் ஐயா" என்று மகள் விடைசொல்ல, "என் மகளுக்கு எந்த நேரமும் படிப்புதான்; அது எனக்குச் சந்தோஷம் கண்ணே" என்று சொல்லிவிட்டுச் சிதம்பரப்பிள்ளை சிறிது நேரம் யோசித்தவண்ணம் சும்மாவிருந்தார். மகளும் பக்கத்தே நின்றாள். "கண்ணே, சுந்தரம், உன்னிடத்தில் ஒருகாரியத்தைக் கேட்டறிய விரும்புகிறேன்; கேட்கலாமா" என்று அன்புடன் தகப்பன் வினவ, மகள் "ஐயா, நீங்கள் கேளாமல் வேறுயார் கேட்பது; கேளுங்கள் ஐயா" என்று அன்புடன் புன்சிரிப்புத்தோன்றப் பதில் சொன்னாள். "என் மகளே, வேறொன்றுமல்ல; உன் அண்ணனுக்குப் பல இடங்களிலுமிருந்து விவாகம் பேசிவருகிறார்கள்; முருகர் இரண்டொரு பகுதியில் தக்க கல்யாணம் பேசிக்கொண்டு வந்து செய்யச்சொல்லி எங்களை நெருக்குகிறார். ஆனால், உங்கள் அம்மா உன்னுடைய கருமத்தை நிறைவேற்றியபின்புதான் உன் அண்ணனுக்குச் சடங்கு செய்யவேண்டுமென்று விரும்புகிறாள். உங்கள் தாய் சொல்வதும் சரி; எனக்கும் அதுவே விருப்பம்; ஆனதால், என் அருமைமகளே; "தந்தை சொன்மிக்க மந்திரமில்லை" என்றவிதமாக, என்சொல்லைத் தட்டாதே; உனக்குத் தக்கஇடத்திலே நல்ல சம்பந்தஞ் செய்துவைத்தல் என்னைப்பொறுத்ததாகும்; உங்கள் நன்மையையிட்டே நான் இருக்கிறேன்; பெற்றோர் எப்பொழுதும் தம்பிள்ளைகளை வாழவைக்கவேண்டுமென்ற நோக்கங்கொண்டவர்களாவர். ஆனதால, உன் எண்ணத்தை எனக்கு வெட்கப்படாமற் சொல்லடியம்மா; நான் அதற்குத்தக்கதாய்ச் செய்துவைக்கிறேன் என்று தகப்பனர் தம் பிள்ளைக்கு ஆதரவாக அன்பு ததும்பச் சொன்னார். மகள், சொல்வதின்னதென அறியானாய்ச் சிறிது நேரம் திகைத்துநின்று பின் ஒருவாறு தன்மனச்சைதத் தேற்றிக்கொண்டு தந்தையைப் பார்த்துப் பணிவுடன் "ஐயா, நீங்களும் அம்மாவும் யோசித்துச் செய்வதைப் பிள்ளைகளாகிய நாங்கள் கண்டுகொண்டிருக்கவேண்டியதேயொழிய எங்களை என்ஐயா சம்மதங் கேட்கிறீர்கள்; பெற்றாரைக்காட்டிலும் பிள்ளைகள் அதிகம் அறிந்திருப்பதாக நினைப்பது தவறு ஐயா; அண்ணனுடைய கருமத்தை முந்தி நீங்கள் செய்து வைக்கவேண்டுமென்பது தான் எனக்கு விருப்பம்; உங்களுடைய விருப்பம் அப்படியில்லாமலிருக்கும்போது நீங்கள் சொன்னபடி நான் கேட்டு நடக்கவேண்டுந்தானே ஐயா; அதைப்பற்றி ஏன் ஐயா நீங்கள் யோசிக்கிறீர்கள்" என்று சொன்னாள்; "என்மகளே, நீ இப்படிச்சொன்னது எனக்குப் பெரிய சந்தோஷம்; நீயோ சாமானியமான பிள்ளையல்ல; நல்ல விவேகி, நன்றாய்ப் படித்திருக்கிறாய்; ஆனதால் உன்னை உசாவாமல் உன்கருமத்தில் பிரவேசிக்க நான் விரும்பவில்லை; இப்பொழுது சம்மதித்துக்கொண்டாய்; ஆனபடியால் எங்கள் குடும்பத்தைப் பார்க்கிலும் செல்வஞ் செல்வாக்கு உத்தியோகம் அதிகாரம் முதலியவைகளிற் சிறந்த ஒரு குடும்பத்திலே தான் தக்க மாப்பிள்ளையைப்பேசி ஒழுங்கு செய்யப்போகிறேன்; கண்ணே, நான்செய்வது எதற்கும் நீ சம்மதந்தானே" என்று கேட்டார் சிதம்பரப்பிள்ளை; மகள் சிறிது சும்மாநின்றுவிட்டு "ஐயா, உங்களுக்கு நான் சிறுபெண் ஏதுஞ் சொல்வது முறையல்ல, செல்வஞ் செல்வாக்கு அதிகாரம் உத்தியோகமென்னுமிவைகளைக் காட்டிலும் குலங்குடியொழுக்கம் கல்வியறிவு கடவுளிடத்தன்பு தருமசிந்தனையென்னு மிவைகள்தான் மேலானவையென்று நினைக்கிறேன்; செல்வஞ் செல்வாக்கு அதிகாரம் உத்தியோகமில்லாவிட்டாலும் காரியமில்லை; ஆகூழிருந்தால் அவைகள் காலகதியிலே தாமாக வந்துசேரும்; இவைகளைத்தான் ஐயா, பிரதானமாகப் பாருங்கள்" என்று மெல்லமெல்லச் சொன்னாள் சுந்தரேசுவரி. "மகளே, நீ சொல்வது முழுவதுஞ் சரியம்மா; ஆனால் எல்லாம ஒருங்கு வந்து சந்திக்குமென்று நாம் காத்திருக்கலாமா? இயன்ற வரையிற் பார்ப்போம் கண்ணே; இனி, உன்னுடைய அதிர்ஷ்டத்திலே தங்கியிருக்கிறது; ஆனால், எதனையும் உன்னுடைய சம்மதமில்லாமல் நிச்சயம் பண்ணமாட்டேன்" என்றார்.

"தரகர்பேசும் கல்யாணம் எப்பொழுதும் வாய்க்காது"

"நீங்கள்சொல்வதுநிசம்; ஆனால் ஐயா, தரகர் பேசுங்கலியாணம் பெரும்பாலும் நன்மைக்கு வாராது ஐயா, அதனையிட்டுத்தான் நான் பயப்படுகிறேன்" என்று மகள் சொல்ல "ஏனடியம்மா அப்படிச் சொல்லுகிறாய்; கல்யாணத்தரகர் எல்லாரையும் நல்லவரென்று நான் சொல்லவில்லை; எங்கள் முருகரம்மானைப்பற்றி நான் முக்கியம் கேள்விப்பட்டிருக்கிறேன்; அவர் தாம் ஏதும் பொருள்பெற ஆசைப்பட்டுப் பொருந்தாச் சம்பந்தத்தைப் பொருத்தி வைப்பவரல்லர்; உன் அண்ணனுக்கு இப்பொழுது அவர் பேசி நாங்கள் ஒருஅளவிற்கு நிச்சயஞ் செய்திருக்கும் அந்தச் சம்பந்தம் நல்லசம்பந்தமல்லவா? மகளே; நீயே அந்தப்பிள்ளையை ஒருநாள் நேரிற் பார்த்தாயே; அந்தப்பிள்ளைக்கு என்னகுறை? அவள் அழகிற்குறைவா? அறிவிற் குறைவா? அந்தப் பெண்ணைப்போல எவரும் பாட நான் கேட்டதில்லை மகளே; இனி, அந்தக் குடும்பத்திலுள்ள செல்வஞ் செல்வாக்கென்ன? மதிப்பென்ன, அதிகாரமென்ன, உத்தியோகப் பெருமையென்ன, முருகேசபிள்ளையின் நாவசைய நாடசையுமாமே! அப்படியான இடத்திலேயல்லவோ, தேடிப் பெண்ணை மாப்பிள்ளையை எடுக்கவேணும். மகளே, நீ சிறுபிள்ளையானதால் உனக்கு உலகமே தெரியாது; அப்படியிருக்க நீ அவர்களைப்பற்றி எப்படியறிய முடியும்; முருகரம்மான் எனக்கு அந்தக் குடும்பத்திலுள்ள மேன்மைகளையெல்லாம் பலமுறையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்; அல்லாமலும் உன் அண்ணன் அந்தப்பெண்ணைச் செய்யச் சம்மதித்திருக்கிறான்; அக்கன்னிகையிடத்தில் அவன் விருப்பம் வைத்திருக்கிறான்" என்று தந்தையார் சொல்லிமுடித்தார். "என்னவோ, ஐயா, எனக்கொன்றுந் தெரியாது; என்னையறியாமல் அந்தப்பெண்ணில் ஒருவெறுப்பு உண்டாய்விட்டது; அவர்களுடைய போக்குவாக்கு எங்கள் குடும்பத்திற்கு ஒத்துப்போகத்தக்கனவாய்க் காணவில்லை; அந்தப் பெண்ணில் ஒதுக்க பதுக்கத்தைக் காணேன்; எங்கள் அம்மாவிற்கு அவ்வளவு விருப்பமாய்க் காணவில்லை; ஒரு கன்னிகையாகப்பட்டவள் மேடையிலிருந்து பலநூற்றுக்கணக்கான ஆண்கள், அவர்களுள்ளும் வாலிபர்கள் மத்தியிலே கூசாமற் பாடத் தலைப்பட்டுவிட்டால், பிறகு அந்தப் பெண்ணுக்கு அடக்கமெங்கிருந்து வரும்? ஒடுக்கம் எப்படி வரும்? அல்லாமலும் உங்களுக்கு நான் சொல்லுவதெப்படி ஐயா, புதிய குடும்பங்களுள் நாங்கள் போய்ப் புகவேண்டிய அவசியமில்லையென்றெண்ணுகிறேன்; அவர்களைக்காட்டிலும் செல்வஞ் செல்வாக்கில் நீங்கள் குறைந்தவர்களா? ஐயா, உங்கள் பெருமை உங்களுக்குத் தெரியாது; எங்கள் அம்மாவிற்கும் அந்தச்சம்பந்தம் அவ்வளவுடன்பாடில்லை; உங்களுக்குப்பயந்து அம்மா ஒன்றும் மாறுகப் பேசவில்லை; ஆனதால் அதை விட்டுவிடுவது நல்லதையா" என்று சுந்தரேசுவரி வெளிப்படையாகத் தகப்பனுக்குச் சொன்னாள். சிதம்பரப்பிள்ளை மகளுக்கு எவ்விதமான பதிலுஞ் சொல்லாமல் வெகுநேரம் யோசித்துவிட்டு, "மகளே, உன் அண்ணன் விஷயத்தையிட்டுப் பிறகு யோசிப்போம்; உன் விஷயமாக உனது எண்ணத்தை என்னிடஞ் சொல்லவொண்ணாதா! நான் உன்னைப்பெற்ற பிதாவல்லவா? இலச்சைப்படாமற் சொல்லம்மா" என்று சிதம்பரப்பிள்ளை பரிவுடன் பின்னருங் கேட்டார்; "ஐயா, என் அண்ணனுடைய கருமம் முற்றில்லாமலிருக்க நான் என்னபதில் சொல்லமுடியும்! அவருடைய கருமத்தைத்தான் ஐயா முந்தி நிச்சயப்படுத்தவேண்டும்; என்னை இப்பொழுது எதைப்பற்றியும் முற்றுச் சொல்லும்படி நெருக்காதீர்கள் ஐயா" என்று சொல்லி முடித்தாள் மகள். சிதம்பரப்பிள்ளைக்குத் தம் மகளிடத்தில் அளவுகடந்த அன்பு உண்டு, மகள் அந்த நேரத்திற் சொன்னவைகளையெல்லாம் நியாயமானவையென்ற எண்ணம் அவர் மனத்திற் புலப்பட்டது; ஆயினும் தாம் நினைத்திருந்தவைகட்கெல்லாம் தம்மகளின்பேச்சு மாறுகவிருக்கிறதேயென்று அவர் எண்ணி எண்ணிக் கவலைப்பட்டார்; தமது மகளை இருந்து படிக்கச்சொல்லிவிட்டு அவர் அந்தஅறையைவிட்டு அப்புறம் அகன்றார். தாம் பேசிய சம்பந்தம் தமது மனைவிக்கு உடன்பாடல்லவென்பதையும் அப்பொழுதே சிந்தித்துக்கொண்டுபோய்த் தலைவாசற்பக்கத்திலிருந்து பலவாறு யோசித்தார்.

(வரும்)

தபால்பெட்டிகளில் விஷமம்

பிஷவார் தபாற்கந்தோரில் குழந்தைகள் பணத்தை எடுத்துச் சென்றனவாம்

கல்கத்தா அக் 7—

முக்கியமாகத் தபால் பெட்டிகளில் விஷமஞ் செய்வது இன்னும் ஓயவில்லை.

ஆம்ஹர்ஸ்ட் தபாலாபீஸைச் சேர்ந்த ஒரு தபால் பெட்டிக்குத் தீ வைக்கப்பட்டது. இதை அணைப்பதற்கு முன்னமேயே கடிதங்கள் நாசமாகி விட்டன.

கார்ப்பர் தெரு தபாலாபீஸிலிருந்து 300 ரூபாய் களவாடப்பட்டதாக இப்பொழுது தெரிகிறது. தபாலாபீஸ் கவுண்டர் மூலமாக ஒரு நாட்டுவெடியும் கொளுத்தப்பட்ட கந்தைகளும் வீசப்பட்டன. இது சம்பந்தமாக நான்குபேர் கைது செய்யப்பட்டனர்.

பிஷவார்

பிஷவார் அக் 7—

வழக்கம் போல் செஞ்சட்டையினர் இன்றுகாலையும் நீதிஸ்தலங்கள் முன் கூடினர். ஆனால், அப்பால அவர்கள் பொலிஸ ஸ்தானங்கள் பக்கமாகப் போனார்கள். அங்குப் பொலிஸார் அவர்களைச் சூழ வளைத்துக் கொண்டனர்.

கன்டோன்மெண்ட் காங்கிரஸ் கொமிற்றித் தலைவரும், இன்னுமிருவரும் கைதியாயினர்.

ஆரம்பத்திற் சில கடைகள் மூடப்பட்டிருந்தன. ஆனால், அப்பால்யாவும் திறக்கப்பட்டு விட்டன.

நேற்றுமாலை ஒருசிறு கூட்டம் சபக் மாண்டி தபாலாபீஸைத் தாக்கியது. இக்கூட்டத்தில் பெரும்பாலும் குழந்தைகளே இருந்தன. இவர்கள் மேற்படி தபாலாபீசுக்குள் நுழைந்து பணத்தை எடுத்துச் சென்றுவிட்டதாகத் தெரிகிறது. சிறிது நேரம் பொலிஸார்மீது கற்கள் எறியப்பட்டன நேற்று 18 பொலிஸாருக்குக் காயம் ஏற்பட்டது.

பொன்னேரி கிராமங்களுக்குக் கூட்டு அபராதம்

சைதாப்பேட்டை அக் 6

பொன்னேரித் தாலுக்காவிலிருக்கும் ராமா செட்டிபாளையம் அப்பாபாளையம் கிராமவாசிகள் மீது முறையே ரூ 150 ரூ 500 ரூ 1000 கூட்டுவரி விதித்துச் சென்னை அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறார்கள். முஸ்லிம்களும் ஷெட்யூல்ட் வகுப்பாரும் வேங்கட செட்டிபாளையம் சுப்பாரெட்டி பாளையம் கிராமங்களைச் சேர்ந்த சில பேர்வழிகளும் இந்த அபராதத்திலிருந்து நீக்கப்பட்டிருப்பதாகவும் உத்தரவிற் கூறப்பட்டிருக்கிறது.

கண்டியிற் காகித உற்பத்தித் தொழிற்சாலை

திறப்பதற்கு ஏற்பாடுகள் நடைபெறுகின்றன

கண்டியிற் காகிதம் உற்பத்தி செய்தற்கான தொழிற்சாலையொன்றை ஸ்தாபிப்பதற்குத் தொழில் வர்த்தகப் பகுதி ஏற்பாடுகள் செய்து வருகிறது.

அம்பிட்டியாவுக்குச் சமீபத்தில் அங்கு வதியும் மக்களின் ஆதரவோடு அண்மையில் திறக்கப்பட்ட பயிற்சி நிலயம் திருப்திகரமாக நடைபெறுவதாகத் தொழில்மந்திரி சமீபத்தில் அங்கு விஜயஞ் செய்த பின்னர் கூறியிருக்கிறார்.

பன்னிரண்டு மாணவர்கள் ஆறுமாத காலப் பயிற்சி யொன்றைப் பூர்த்தி செய்திருக்கின்றனர். மற்றும் எட்டு மாணவர்கள் மூன்று மாதங்களாகப் பயிற்சி பெற்று வருகின்றனர். அந்நிலயத்தில் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தின் ரகமும் அங்கீகாரம் பெற்றிருக்கின்றது.

பயிற்றப்பட்ட மாணவர்கள் ஒரு தொழிற்சாலையில் வேலைக்கமர்த்தப்படவேண்டுமென்றும் மேலும், அதிக மாணவர்கள் பயிற்சி நிலயத்திற் சேர்க்கப்படவேண்டுமென்றும் மந்திரி முடிவு செய்திருக்கிறார். அதற் கிணங்கத் தொழிற்சாலையொன்றைத் திறப்பதற்குத் தகுதியான கட்டிடமொன்று இப்பொழுது வேண்டியதாக விருக்கிறது.

சட்ட மாணவர்களின் குறைகள்

பிரதம நீதிபதிக்கு விண்ணப்பம்

சட்டமாணவர்கள் தங்கள் குறைகள் பற்றிப் பிரதம நீதிபதிக்குஞ் சட்டக் கலைச்சபைக்குந் தெரிவித்து அவற்றைக் கவனிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். பிரதம நீதிபதி சட்ட மாணவர் சங்கத்தின் தலைவராதலாற் குறித்த மாணவரின் தூதுக்கோஷ்டி ஒன்று அவரைப் பேட்டிகாண அநுமதி யளிக்கும்படியும் இவர்கள கேட்டுக் கொண்டனர்.

இவ்வகுப்பினர் தொழில் ஸ்தாபனமொன்றைச் சேர்ந்தவர்களென்பதை உத்தேசித்துத் தங்கள் நிதி நிலைமையைத் தெளிவாகவும் உறுதியாகவும் நிர்ணயிக்கும்படி கோரிப் பிரதம நீதிபதிக்கு ஒரு வேண்டுகோளை விடுத்தனர். தாம் ஒரு தொழில் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களாதலால் பொறுப்பை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டுமென்றும தமது நிதியைத் தாமே நிர்வகிக்க அநுமதிக்க வேண்டுமென்றும் இவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

மேலும் மாணவருக்கு விளையாட்டு வசதியின்மை பற்றியும் சிற்றுண்டிச்சாலையொன்றில்லாமை பற்றியும் இவர்கள் குறை தெரிவித்தனர். சட்டக்கலூரிச் சஞ்சிகை பற்றியுங் குறை கூறப்பட்டது.

சென்ற வருடம் வெளிவரவிருந்த சஞ்சிகை வெளியிடப்படவில்லையெனக் கூறப்பட்டது. பிரதம பொக்கிஷதார் சட்ட அமைப்பிற்கு விரோதமாக நடந்துகொண்டதே இதற்குக் காரணமென்று தெரிவிக்கப்பட்டது.

சிற்றுண்டிச்சாலை பற்றிப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் தகுந்த சிற்றுண்டிச்சாலை ஒன்று அமைக்கப்படாமையால் தேநீர்க் கடைகளில் திருப்திகரமற்ற தேயிலையைத் தாம் பருக நேரிடுகிறதென்று மாணவர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

புகைவண்டிகளிற் திருட்டு அதிகரிப்பு

உணவுப் பொருள்கள் மறையும் மாயம்

நஷ்டமடைந்தவர்களின் கோரிக்கை

இப்பொழுது புகை வண்டியில் உணவுப் பொருள் திருட்டு மிகவும் அதிகரித்து வருவதாகச் சொல்லப்படுகிறது. புகைரதமூலஞ் சாமான்களை ஏற்றியனுப்புவது கட்டுப்படுத்தப்பட்டதின் பலனாகப் புகைரதப் பார்சல் போக்குவரத்து அதிகரித்திருப்பதால் குறித்த திருட்டு அதிகரித்து வருவதாகத் தெரிகிறது.

அண்மையில் மற்றுஞ் சில சாமான்களோடு கொழும்பு ராணி மாளிகைக்கு அனுப்பப்பட்ட 30 முட்டைகள் களவு போனதாகத் தெரிகிறது. குறித்த சாமான்கள் அம்பேபுசாவிலுள்ள அரசாங்கப் பண்ணையிலிருந்து அனுப்பப்பட்டனவாகும். முட்டைகள் பத்திரமாக ஒரு பெட்டியி லடைக்கப்பட்டு அனுப்பப்பட்டன. இப்பெட்டி கொழும்பில் திறந்து பார்க்கப்பட்டபொழுது முட்டைகளிருந்த இடத்தில் முட்டைக் கோதுகள் இருந்தனவென்றும், உடைந்தபாகம் கீழேயும் ஏனையபாகம் மேலேயுமாக அவை வைக்கப்பட்டிருந்தன வென்றும் தெரிய வருகிறது.

மேலும் பிரபல அதிகாரி யொருவருக்கு அனுப்பப்பட்டிருந்த உணவுப் பொருள்கள் திருடப்பட்டு அவற்றின் தகரங்கள் மண் நிரப்பப்பட்டு வைக்கப்பட்டிருந்த தென்றுந் தெரிய வருகிறது.

இவ்விரு திருட்டுகள் சம்பந்தமாகப் பொலிசார் அல்லது புகைரத அதிகாரிகள் இதுவரை குற்றஞ் செய்தவரையாவது கண்டு பிடிக்கவில்லையெனத் தெரிகிறது.

மற்றொரு திருட்டின் பலனாக, ஒரு புகைரத நிலயத்திலிருந்து அனுப்பப்பட்டதிற் காணப்படவில்லையெனத் தெரிகிறது. வெண்ணெய்த் தகரங்களிருந்த பெட்டியைப் போன்ற வெறும் பெட்டியொன்று புகைரதத்தில் வைக்கப்பட்டிருந்ததாகச் சொல்லப்படுகிறது. இத்திருட்டின் மர்மத்தையும் கண்டுபிடிக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் பயன்படவில்லை.

இன்னும் சிறிது கூடுதலாய் உணவு வசதி கிடைக்கும்

சேர். பரன் இந்தியாவுக்குத் தூது சென்றதின் விளைவு

இந்தியாவுக்குத் தூதுசென்று சமீபத்தில் இலங்கைக்குத் திரும்பிவந்திருக்கும் சேர். பரன் ஜயத்திலகா சென்ற சனிக்கிழமைகாலை ஒரு பத்திரிகை நிருபருக்குப் பேட்டியளிக்கையில் தமது தூது திருப்திகரமான பதிலளித்திருப்பதாகத் தெரிவித்தார்.

எனினும், இவ்விஷயம்பற்றி மந்திரிசபையில் ஓர் அறிக்கையைத் தாம் உடனே சமர்ப்பிக்கப்போவதாக அவர் தெரிவித்தார். எனவே, இந்நிலைமையில் தமது சம்பாஷணையின் விவரம்பற்றிப் பகிரங்கமான அறிக்கையொன்றை விடுப்பது தகுதியல்லவென்றும் மந்திரி குறிப்பிட்டார்.

இலங்கைக்குத் தேவைப்படும் அரிசியும் உணவு'சப்ளை'களும் நிச்சயமாகக் கிடைக்குமாவென்று தெரிவிக்கும்படி வற்புறுத்திக் கேட்கப்பட்டபோழுது மேலும் சொற்ப 'சப்ளை' கிடைக்குமென்று மந்திரி பதிலளித்தார்.

காலத்திற்குக்காலம் எழும் உணவுச்'சப்ளை'ப் பிரச்னைகளையும் சமாளிக்கும்பொருட்டு இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியொருவரை இந்தியாவில் நியமிப்பதைச் சேர். பரன் மிகவும் ஆதரிக்கிறார். இவ்விஷயம் பற்றி மந்திரிசபையுடன் ஆலோசிக்க அவர் உத்தேசித்திருக்கிறார்.

டில்லியில் மட்டுமேன்றி முடியுமானால் இந்தியாவிற் பற்பல பகுதிகளிலும் ஒவ்வொரு பிரதிநிதியை நியமிப்பது விரும்பத்தக்கதென்று தாம் கருதுவதாக மந்திரி தெரிவித்தார்.

விஷமப் பிரசாரம்

இலங்கைக்கு விரோதமான பிரசாரமொன்று இந்தியாவிலிருந்துவந்ததாகவும் அதனால் விஷமமேற்பட்டதாகவும் சேர். பரன் கூறினார். மேலும் அவர் கூறியதாவது:-

'இலங்கையில் இந்தியத்துவேஷமிருந்துவருவதாகக்குறைகூறப்பட்டதையொட்டி ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நான் விளக்கப்படுத்தினேன்.

இக்குற்றச்சாட்டு ஆதாரமற்றதென்பதை நான் எடுத்துரைத்தேன். இலங்கையிலுள்ள மிகப்பெரிய வர்த்தக ஸ்தாபனங்களிற் சில இந்தியருக்கே சொந்தமானவையென்றும் இந்தியருக்கு ஏராளமான தேயிலை றப்பர் தென்னந்தோட்டங்களிலிருக்கின்றனவென்றும் நான் எடுத்துக்காட்டினேன். கொழும்பு நகரிலுள்ள வீடுகளில் ஏராளமானவை இந்தியருக்குச் சொந்தமானவையென்றும் நான் குறிப்பிட்டேன்.

இலங்கையில் குக்கிராமங்களிலும் தனிப்பட்ட இந்திய வியாபாரிகள் தமது தொழில்களை நடத்திவருகின்றனரென்றும் அவர்களிடம் விரோதமிருந்தால் அவ்வாறு அவர்கள் வியாபாரத்தை நடத்த முடியாதென்றும் நான் கூறினேன்.

இலங்கையின் அரிசி விநியோகக் கட்டுப்பாட்டுத் திட்டமொன்று நடையிலிருந்து வருவதைக் கேள்வியுற்று அரசாங்க அதிகாரிகளும் மற்றும்பலரும் ஆச்சரியமடைந்தனர். குறிப்பாக இலங்கை முழுவதிலும் இத்திட்டம் நடைமுறையிலிருந்து வருவது அவர்களுக்காச்சரியத்தை யளித்தது. இத்திட்டம் எவ்வாறு நடையிலிருந்து வருகிறதென்று அறிய அவர்கள் விரும்பினர்.

வைஸ்ராயின் ஆர்வம்

விசேஷமாகப் பம்பாய் மக்கள் இலங்கையின் அரிசிவிநியோகத்திட்டத்தில் ஆர்வமுடையர். பம்பாய கவர்னரும் வைஸ்ராயும் நமது திட்டத்தின் விவரங்களையறிய விரும்பினர்.

நான் சென்னையில் 10 தினங்கள் வரை தங்கினேன். எனது தூது சம்பந்தமாகக் கவர்னரையும் அவரது ஆலோசகர்களையும் நான்பேட்டி கண்டேன். கல்கத்தாவில் பிரதம மந்திரி வர்த்தக மந்திரி டேக்கா நவாபு ஆதியோருடன் நான் சம்பாஷித்தேன்.

நான் கல்கத்தாவில் தங்கிய 10 தினங்களில ஒரிசா மாகாணத்தின் தலைநகரான கட்டாக்குக்கும் சென்றேன்.

டில்லியில் மூன்றுவார காலம் நான் தங்கினேன். அப்பொழுது வைஸ்ராயையும் மற்றையஅரசாங்க அங்கத்தினரையும் நான் பேட்டி கண்டேன். வியாபார அங்கத்தவர் மிஸ்டர். என். ஜே. சர்க்காரையும் வெளிநாட்டுஇலாகா அங்கத்தவர் மிஸ்டர் ஆனேயையும் நான் கண்டு பேசினேன்.

இலங்கையின் அரிசி'சப்ளை'பற்றி ஆலோசிக்கும் பொருட்டு மூன்று மகாநாடுகள் நடைபெற்றன. வியாபார அங்கத்தவரும் அவருடைய ஆலோசகர்களும் இவற்றிற் கலந்து கொண்டனர்.

டில்லியைவிட்டு நான் பம்பாய்க்குச் சென்றேன். நான் புகைரதத்திலிருந்திறங்கியதிலிருந்து ஒருநாள் முழுவதும் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டியளிக்க நேர்ந்தது.

பம்பாய்க் கவர்னர் சேர். ரோஜர் லம்லி பிரதம காரியதரிசி மிஸ்டர். கிருபாலினி அரசாங்கத்தின் பிரதம ஆலோசகர் மிஸ்டர். எச். நைட் காங்கிரஸைச் சேர்ந்தபிரமுகர் திரு. புலாபாய்தேசாய் சட்டசபை அங்கத்தவர் சேர். புருஷோத்தம தாஸ் தாகூர்தாஸ் ஆகியோருடனும் நான் சம்பாஷித்தேன்.

நான் கண்டு பேசிய பிரபல இந்தியர்களில ராஜா சேர். அண்ணாமலைச் செட்டியாரும் ஒருவராவர். அடையாறிலுள்ள இவருடைய அழகிய வீட்டில் நான் விருந்தினராக வரவேற்கப்பட்டேன்.

நான் சென்றவிடமெல்லாம் மிக மனமார வரவேற்கப்பட்டேன்.

தேசிய அரசாங்கம் அமைக்க வற்புறுத்தல்

சர்ச்சிலுக்கு ஹிந்துமகா சபைத் தலைவரின் தந்தி

பம்பாய் அக் 10— பார்லிமெண்டில் நடைபெற்ற இந்திய விவாதத்தைப் பற்றி இந்தியப் பத்திரிகைகள் இன்னும் எழுதவில்லை மிஸ்டர். அமெரியின் பிரசங்கம் பற்றி ஜனுப் ஜின்னா ஒன்றுங்கூற மறுத்துவிட்டார். ஹிந்துமகா சபைத் தலைவர்கள் விசேஷ கமிட்டிக் கூட்டத்திற்குச் சமூகமளித்துவிட்டுத்தங்கள் ஊர்களுக்குத் திரும்பிச் சென்றிருப்பதால் அவர்களால் ஒன்றும் கூறமுடியவில்லை.

இம்மாதிரியே தனது சொந்த அலுவல்கள் காரணமாக மிஸ்டர். ராஜகோபாலச்சாரியர் சென்னைக்குச் சென்று கொண்டிருக்கிறார்.

இந்த மகாசபைத் தலைவர் மிஸ்டர். சவர்க்கார் விவாதம் பற்றி யொன்றும் கூறவிட்டாலும், பிரிட்டிஷ் பிரதம மந்திரி மிஸ்டர். சேர்ச்சிலுக்கு அவர் அனுப்பியிருக்கும் தந்தி யொன்றில் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். தேசிய அரசாங்கமொன்று அமைக்கப்படவேண்டுமென்று அவர்தந்தியில் வற்புறுத்துகிறார்.

'மீண்டும் பழைய பல்லவி'

மிஸ்டர். அமெரி முன் கூறியதையே திருப்பிச் சொல்லியிருக்கிறாரென்று புதுடில்லியில் கருதப்படுகிறது. மிஸ்டர். அமெரி பேசும்போதெல்லாம் இந்தியப் பிரச்னையை மேலும் சிக்கலாக்கி விடுகின்றாரென்று மிஸ்டர்.கே. எம்.முன்ஷி தெரிவித்தார்.

ஆமதபாத்தில் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம்

ஆமதபாத்தில் இன்று பொலிசார் மூன்றிடங்களிற் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர். ஒருவருக்கும் காயமேற்படவில்லை. பொலிசார்மீது கல்லெறியப்பட்டது காரணமாகப் பொலிஸ்காரர் ஒருவர் காயமடைந்தார். பம்பாயில சமீபத்தில் நடைபெற்ற கலவரங்களிற் பங்கெடுத்துக் கொண்டவர்களென்று சந்தேகிக்கப்பட்ட 300 க்கு அதிகமான பேர்களைப் பொலிஸார் நேற்றிரவு கைது செய்தனர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அறிவித்தல்

இத்தால் சகலருமறிவது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்குச் சொந்தமானதும் மேற்படி கல்லூரியின் மாட்டுத்தொழுவத்தில் நிற்பவைகளுமான மூன்று கேப்பைப் பசுக்களும், ஒரு காட்டுப் பசுவும் அவைகளைச் சேர்ந்த மூன்று கன்றுகளும் நிகழும் அக்டோபர் மாசம் 17-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

த. முத்துச்சாமிப்பிள்ளை
கௌரவகாரியதரிசி

இந்துக்கல்லூரி
விடுதிச்சாலை
10.10.42
Mis. 140 12&15.10.42

விஜயதசமி

பிரம்மஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் எழுதியது

நவராத்திரி முடிந்த மறுநாளாகிய தசமிதிதிக்கு விஜயதசமியென்று பெயர். அனேக பின்ன சக்திகளாக நின்று மகிடாசுரனைச் சங்காரஞ் செய்து வெற்றிபெற்று வந்த பராசத்தி அகரமுதல ஐம்பத்தோரட்சரங்களுடன் விளங்கும் மகாசத்தி பீடத்தின் நடுவில் எழுந்தருளிய காளாதலின் இத்திதிக்கு விஜயதசமியென்று பெயருண்டாயிற்று. எந்தநாளிலும் சூரியாஸ்தமனகாலம் விஜய முகூர்த்தமென்று பெயர். அந்நேரத்தில் செய்யப்படும் கருமங்கள் வெற்றியைக் கொடுக்குமென்பது நூற்றுணிபு. ஆனதால் அற்றைத்தினத்தில் தாங்கள் இருக்குமிடத்தினின்று வடதிசையை நோக்கிப் போய்வருவார்களாயின், அவர்களுடைய மனஎண்ணங்கள் அடுத்தவிஜயதசமிவரையில் கைகூடி வரும். அத்தருணம் பட்சிகளுடைய சகுனம் நன்மையாயிருந்தால் மிக உத்தமம்.

இத்தினத்திலே வித்தியாரம்பஞ் செய்வது உத்தமமாகும். பஞ்சாங்க சுத்தி இல்லாவிடினும் எக்கருமங்களையுஞ் செய்யலாம். பஞ்சாங்க யோகமும் இருந்தால் உத்தமம். சரஸ்வதி பூசைக்குரிய மூன்றுநாளிலும் விசேஷமாக ஏடு புஸ்தகங்களை வைத்துப் பூசித்துத் தசமியன்று பூசித்த ஏட்டை அவிழ்த்து வாசித்தால் வித்தியாவிருத்தி மேன்மேலும் உண்டாம். அரசர்கள் ஆத்திவனத்தில் ஆயுதம் வில்வாள் எடுத்து அப்பியாசஞ் செய்தல்வேண்டும். புதிதாகத் தொழில முயற்சியைத் தொடங்குவார்களாயின் அம்முயற்சிகள் மிகவும் பலிதமாம்.

சரஸ்வதிதேவியை மூல நட்சத்திரத்தன்று புத்தகத்திலாவது கும்பத்திலாவது பூசித்துத் திருவோண நட்சத்திரத்தில் விசர்ச்சனம் செய்யவேண்டும். இத்தினத்தைத்தான் மஹாநவமி என்று சொல்வது. இந்த மூன்றுநாளிலும் படிக்கவும் எழுத்துக்களை எழுதவும் கூடாது. விஜயதசமிநாளில் சமீவிருட்ச மென்னப்படும் வன்னிமரத்திற்குப் பூசை செய்யவேண்டுமென்று நியமிக்கப்பட்டிருக்கிறது. தம்மை வழிபடுபவர்களது பாபத்தைச் சமிக்கச் செய்வதால் சமீ எனப் பெயர்பெற்றது. சத்துருக்களை நாசஞ் செய்வதற்கும், பாவங்களை நீக்குவதற்கும் உரிய மகத்துவம் இந்த மரத்திற்குமுண்டு.

பஞ்சபாண்டவர்கள் அஞ்ஞாதவாசத்தில் இந்த வன்னிமரப் பொந்தில தமது ஆயுதங்களை ஒளித்துவைத்து விராடநகரஞ்சேர்ந்து பசுநிரை மீட்க நவராத்திரியின மறுநாளாகிய தசமிதிதியிலன்று எடுத்து வெற்றியடைந்தார்கள். ஸ்ரீ இராமமூர்த்தி வனவாசத்தில் அவருடன் இனிய வசனங்கூறி அவரால் பூசிக்கப்பெற்ற மகத்துவத்தையுமுடையது. ஆகையால், இதனை வழிபடுவோர் பிரதானமாய்க் காரிய சித்தியையும் வெற்றியையும் பெறுவார்கள்.

நவராத்திரிகாலத்தில் ஒன்பது வகைச் சக்திகளாக விளங்கும் பின்னசக்திகளெல்லாம் பூரணசக்தியாகிய பராசக்தியினிடத்தில் ஐக்கியமடைகின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமக்குரிய ஆயுதங்களைக் கையிற்கொண்டு விளங்குகின்றதனாலும், அவர்களுள் துர்க்காதேவி ஆறுகரங்களிலும் வெவ்வேறு ஆயுதங்களைத் தரித்து விளங்குவதனாலும், அவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் சக்தியைப் பெற்று அளவில்லாத ஆற்றலுடனிருத்தலாலும் அச்சத்திகளை ஒவ்வொருவரும் பூசித்துக் கடைசியில் அவர்களின் சத்தி விசேஷம் நிறைந்த ஆயுதங்களைப் பூசிக்கப்படுவதனால் அத்தினத்திற்கு ஆயுதபூசை யெனப் பெயருண்டாயிற்று. இத்தினத்தில் தத்தம் இல்வாழ்க்கைக்குரிய உபகரணங்களான கருவிகளை வைத்துப் பூசித்தால் நன்மையை அடைவார்களென்ன ஆன்றோர் கூறுவர். இத்தினத்தில் சங்கீத ஆரம்பம், பூமிவாங்கல், புதுக்கணக்குப் பதிதல், வியாபார ஆரம்பம், ஞானசாஸ்திரப் பயிற்சி, இவை முதலியன செய்து கொள்ளலாம்.

சைவப்பெருநெறித் தனிச் சிறப்பு

(ஏழாலை திரு. ஐ. பொன்னையா அவர்கள் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை மண்டபத்தில யாழ்ப்பாணச் சிவனடியார் திருக்கூட்டத்தினரால் நிகழ்ந்த கூட்டத்தில நிகழ்த்திய பேருரை)

“அணங்கமர் யாழ்முரித் தான் பனை பெண்பனை யாக்கியமனை, கணக்கழுவேற்றிக் கடுவிடந் தீர்த்துக் கதவடைத்துப், பிணங்கியளிக் கிழித்தோடஞ் செலுத்தின வெண்பிறையோ, டிணங்கிய மாடச் சிரபுரத் தாண்ட விருக்கமிதே”

அறிவிற் சிறந்த தலைவராயவர்கட்கும் சபையோர்க்கும் எனது வணக்கம். இன்று எடுத்துக்கொண்ட பொருள் சைவப்பெருநெறித்தனிச் சிறப்பு என்பது. பெருநெறியாயுள்ள சைவத்தின் தனிச்சிறப்பை வரையறுத்து எடுத்துக்கூறுதற்குரிய தகுதி எம்மிடமில்லை என்பதை நாமறிவோம். ஆயினும், சைவப் பேரொளியானது உலகமெல்லாம் சுடர்விட்டு ஒளிரவேண்டுமென்னும் பேரவா ஒன்று நம்மிடத்துண்டு. இவ்வெண்ணமானது எம்மை மேல்செலுத்திவிடும் என்னும நிடமான நம்பிக்கையையும் அதுபற்றி யுண்டாகும் மனத்திருப்தியையும் நாமுடையேம், ஆதலால், அந்நெறியிற் சலியாது உழைக்கவேண்டுவதும் நமது கடமையாகின்றது. அதனால் எடுத்துக்கொண்ட பொருளில் எம் சிற்றறிவுக்கெட்டிய சில உண்மைகளை எடுத்துக் கூறலாமென்று கருதுகிறேன். எமது நோக்கம் உயர்ந்ததாயிருத்தலால சொற்பொழிவிற் காணும் பிழைகளைப் பொறுத்துக்கொள்வீர்களென்பது எமது நம்பிக்கை. சிவநெறிபற்றி யொழுகும் மேலோர்களாகிய சிவனடியார்களது பெருமையும் அவர்களைச் சேர்ந்தோர் பெறும்பயனும் “மறப்பித்துத் தம்மை மலங்களின் வீழ்க்குஞ், சிறப்பில்லார் தந்திறத்துச் சேர்வே—றறப்பித்துப் பத்தரினத்தாய்ப் பரனுணர்வி னாலுணரு, மெய்த்தவரை மேவா வினை” எனனும் சிவஞானபோதம் 12ம் சூத்திரத்து உதாரண வெண்பாவில் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. அதனால சிவனடியார்களைச் சேருதலும் அவர்களோடு உரையாடுதலும் அவர்களுக்குத் தொண்டுபுரிதலும் பெருமை தரத்தக்கதே;

சைவம் என்பது சிவசம்பந்தமுடையது. உலகத்திலுள்ள சமயகோடிகளெல்லாம் தனது பெரும் பரப்பினுள் ஏகதேசமா யடங்கத் தானொன்றிலு மடங்காது வீற்றிருக்கும் பெருமை நோக்கி அது பெருநெறியெனப்பட்டது. தனிச்சிறப்பு என்பது ஒப்புயர்வற்ற பெருமையென்றபடி. எனவே சைவமாகிய பெருநெறியின் ஒப்பற்ற பெருமை என்பது அச்சொற்றொடரின் பொருளாகும்.

அதைச் சில உதாரணங்களால விளக்குவோம். உலகத்திற் காணப்படும் சமயங்களெல்லாம நாஸ்திகம் என்றும் ஆஸ்திகம் என்றும் இருவகையினுளடங்கும். அவை ஒவ்வொன்றும் தம்முட் பல பிரிவுகளையுடையனவாயினும் எல்லாம் இந்த இரண்டு பெரும்பிரிவினுளடங்குவனவே. நமது இயக்கங்களுக்கும், நம்மிருப்புக்கும் காரணம் பொருளென்னும் முடிபினையுடையது நாஸ்திகம். இனி, நமது இயக்கங்களுக்கும் செயல்களுக்கும் நம்மிருப்புக்கும் ஆதாரமாயுள்ள பொருள் ஒன்று நம்மினும் வேறாயுள்ளது என்னும முடிபினைக் கொள்வது ஆஸ்திகம்.

ஆராய்ச்சி அறிவுத்துணையுமின்றி வெறும் நம்பிக்கையை யடிப்படையாகக் கொண்ட தற்காலச் சமயங்கள் சில தவிர நாஸ்திகருட்பட மற்றெல்லாச் சமயத்தவர்களும், தத்துவ ஆராய்ச்சி செய்வதில் ஒரே வழியையே கைக்கொண்டனர். நாஸ்திகரும் கடவுளில்லையென்று வாளா கூறுதல் பொருத்தமின்மையினால், காணப்பட்ட உலகின் ஒரு பகுதியாய இத்தூல உடலை ஆராய்ந்து உடம்பே உயிரென்றும் அது அனுபவிக்கும் போகமே மோட்சமென்றும் கண்டனர். தத்துவ ஆராய்ச்சி செய்வோரெல்லாம் இங்கிருந்தே தமது ஆராய்ச்சியைத் தொடங்குதலால் ஆராய்ச்சியின் முதற்படி இதுவேயாம. ஒவ்வொரு சமயத்தின் முடிபையும் காட்டத்தொடங்கின் விரிந்து விடுமாதலால் உதாரணத்திற்காகச் சில சமயங்களை மட்டும் எடுத்துக்காட்டிச் செல்லுவோம். இவரிலும் சிறிது அறிவாராய்ந்த புத்தர் இவ்வுடலினும் சூக்குமமாய அதனுள்ளிருக்கும் சில கருவிகளைப் புத்தித்துவம் வரையில் ஆராய்ந்து சடதத்துவங்களின் பரிணாமமே சித்தென்றும் சடத்திலும் வேறாய்ச் சித்தென ஒரு பொருளில்லை யென்றும் கொண்டனர். இவரிலும் சற்று மேற்சென்ற பிரகிருதி வரையிலாராய்ந்த சாங்கியர் மீமாஞ்சகர் முதலியோரும் இவ்வகுப்பினுள்ளடங்குவர். இனி, இவர்களளவில்நில்லாது சற்றுமேற்போய, பிரகிருதிக்கு அப்பாற்பட்டு விளங்கும் ஆன்மாவின் குணமெனப்படும் அறிவின் விருத்தி நிலையாகிய சிவபோதத்தைக்கண்டு அவ்வளவில் தமது ஆராய்ச்சியை முடித்துக் கொண்டனர் ஏகான்மவாதிகள். அவர்கள், திருவருட்டுணைகொண்டு ஆராய்தலை விடுத்து, தம் பசுஞானத்தையே பொருளெனக் கண்டவர்களாதலால், அதனாராய்ச்சிக்கு எட்டாத மேல்நிலையில் நுழையமாட்டாராய், தாம்கண்ட அக்குணத்தையே ஆன்ம சொரூபமென்றும் அதையே பிரமமென்றும் கண்டார்கள். அன்றியும் சடத்திற்கு வேறாய்ச் சித்தெனபதொன்றில்லை என்னும் புத்தர் கொள்கையோடு மாறுபட்டு சித்திற்கு வேறாய்ச் சடமென்பதொன்றில்லையென்று கூறுவர். இவர்கள் கண்ட சித்து சிவபோதமே யென்பதையும் சைவசித்தாந்தமானது இவர்களுள் எவரோடும் பிணங்காது சடம் சித்து என்னும் இரண்டையும் மேற்கொண்டு மூன்றாவதாகிய அதிசூக்குமசித்தெனப்படும் பரம் பொருளின் நிலையினை எவ்வாறு சுட்டிக்காட்டுகின்றது என்பதையும் இனி விரித்து விளக்குதல் நல்லது என்று எண்ணுகின்றேன்.

தொடரும்.

பாதுகாப்பிலிருந்து தப்பிச் சென்ற கைதிகள்

பம்பாயில் இருக்கின்றனரா?

கண்டிப் பாதுகாப்புச் சிறையிலிருந்து தப்பிச் சென்ற சமசமாஜக் கட்சி அங்கத்தவர்கள் இப்பொழுது பம்பாயி லிருப்பதாக 'பிளிட்ஸ்' என்னும் ஆங்கிலவாரப் பத்திரிகையின் நிருபர் ஒருவர் கூறுகிறார். இவர்கள் ஓர் ஐந்தாம்படை இயக்கம் சத்துருஆதிக்கத்திலுள்ள செய்கோன் அஸாத் றேடியோ நிலையத்திலிருந்து கிடைக்கும் உத்தரவுகளையும் வேண்டுகோள்களையும் பின்பற்றி நடந்து வருகிறதென்று அந்நிருபர் கூறுகிறார். புலேஸ்வரியில் நடைபெற்ற வெடி விபத்துச் சம்பந்தமாகத் தாம் நடத்திய புலன்விசாரணைகள் பற்றிக் குறிப்பிடும்போது குறித்த நிருபர் இது விஷயத்தைக் கூறியிருக்கிறார்.

நாவற்குளி ஸ்தல உதவிச் சங்கம்

நாவற்குளி ஸ்தல உதவிச் சங்கக் கூட்டம் 11-10-42 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு நாவற்குளிக் கிராமச்சங்க மண்டபத்தில ஸ்ரீமாந் கா. மாணர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் காரியதரிசி திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்களால சென்ற கூட்ட வரலாறு வாசிக்கப்பட்டு சபையோரால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டது.

நாவற்குளிப் புகைரத நிலயத்துக்கு அணித்தாகவுள்ள அரசாட்சியாரின் (2ஏ— 5 பேர்ச்) நிலத்தை நாவற்குளிப்பகுதியில உணவுப்பொருள் செய்கை பண்ணுவதற்கு நிலமில்லாதவர்களுள் ஏற்ற ஒருவருக்கு உணவுப்பொருள் செய்கைபண்ணக் கொடுப்பதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்வதற்குச் சங்கம திரு. சி. கணபதிப்பிள்ளை அவர்களை நியமிக்கவேண்டுமென திரு. மு. கணபதிப்பிள்ளை அவர்கள் பிரேரிக்க திரு. ச. சாம்பசிவம் அவர்கள் அனுமதிக்கப் பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது. நிகழ்ச்சிக்குறிப்பிலுள்ள ஏனைய விஷயங்களை அடுத்த கூட்டத்தில் ஆலோசனைக் கெடுத்துக் கொள்வதாகத் தலைவர் ஒத்தி வைத்தார்.

விளம்பரம்

யாழ்ப்பாண டிஸ்திறிக் கோட்டில் கடனிறுக்க இயலா வழக்கு.

இல 197

யாழ்ப்பாணத்துக் கொட்டடியிலிருக்கும் எம். சி. சந்திரசேகரத்தின் கடனிறுக்க இயலாத தொடர்ச்சியில் கடனிறுக்க இயலாதவன்.

இந்த வழக்கில் கடனிறுக்க இயலாதவனுக்குக் கடன் கொடுத்தவர்கள் தங்களுடைய கொடுக்கலை அத்தாட்சிப் படுத்தும்படி, 1942ம் ஆண்டு ஒக்டோபர்மீ 28-ம் திகதி யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் பிரத்தியேகமான இருக்கை ஒன்று வைக்கப்படுமென்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது. இத்தக் கோட்டில் 193-ம் இலக்க வழக்கில் கடனிறுக்க இயலாதவன் என்று தீர்வை செய்யப்பட்ட காலஞ் சென்ற எம். சி. தெண்டாயுதபாணியின் வழக்கும் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

பி. ஞானப்பிரகாசம்
சக்கிடுத்தார்.

1942-ம் ஆண்டு ஒக்ரோபர்மீ 6_
Mis 130 15.10.42.

இலங்கை யுத்தமுயற்சி சம்பந்தமான சித்திரப் போட்டி

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பல பாகங்களிலும் நடைபெறும் யுத்த முயற்சி சம்பந்தமான சித்திரங்களைப் பற்றிக் குடியேற்றமந்திரி ஒரு திட்டம் தயாரித்திருக்கிறார். இத்திட்டம் பற்றிச் சித்திரகாரருக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

இத்திட்டத்தை அமுல் நடத்துவதற்காக ஒரு கமிட்டியைப் பிரதம காரியதரிசி நியமித்திருக்கிறார்.

இராணுவத்துக்குப் படைதிரட்டல், பயிற்சி அளித்தல், யுத்தநடவடிக்கைகள் செய்தல், உணவு உட்படப் பலவகையான சாமான்களை உற்பத்தி செய்தலாகிய இன்னோரன்ன யுத்த முயற்சிகளைப் பற்றிச் சித்திரங்கள் வரையலாம்.

இராணுவ சம்பந்தமான விஷயங்களைப் பற்றிச் சித்திரம் வரைவதானால் கமிட்டியார் பொதுஜன சம்பந்தத்தை ஏற்படுத்தும் உத்தியோகத்தரான மேஜர் 'டிரேக்கின்' உதவியைப் பெறலாம். இம்மாதிரி விஷயங்களைப் பற்றிய விண்ணப்பங்கள் மேஜர் டிரேக்கினிடமே ஒப்படைக்கப் படவேண்டும்.

சித்திரப் போட்டியிற் கலந்து கொள்ள விரும்புவோர் தமது பெயரை அதற்கான 'ஃபார'த்தில் பதிவுசெய்து கொள்வதற்காகச் சமாச்சாரப் பகுதித் தலைவருக்கு விண்ணப்பஞ் செய்து கொள்ளல் வேண்டும்.

இவ்வாறு பதிவு செய்தபின் இராணுவ நிலையங்களை விண்ணப்பஞ் செய்தோர் பார்க்க விரும்பினால், சமாச்சாரப்பகுதித் தலைவருக்கு விண்ணப்பஞ் செய்யலாம். எதைப் பற்றிய சித்திரம் என்றும் இராணுவத்தின் எந்த இடத்துக்குப் போக வேண்டும் என்றும் விண்ணப்பத்தில் தெரிவிக்கப் படவேண்டும்.

மேலைத் தேசச் சித்திர முறையைப் பின்பற்றுவோருக்கு அதிக சலுகை காட்டப்படும். ஆனால்.சகல அம்சங்களிலும் இலங்கைச் சாயலுடைய படங்களுக்கு ஊக்கம் அளிக்கப்படும் என்பதாகக் குடியேற்ற நாட்டு மந்திரி தெரிவித்திருக்கிறார்.

பரிசு விபரம் பின்வருமாறு:-

1-ம் பரிசு—300 ரூபாய், 2-ம் பரிசு—200 ரூபாய் 3-ம் பரிசு—100 ரூபாய்
20 சிறிய பரிசுகள் ஒவ்வொன்றும் 50 ரூபாய்.

சிறந்த படங்கள் தெரிவு செய்யப்பட்டு லண்டன் சமாசாரப் பகுதிக்கு அனுப்பப்படும். அங்கே இப்படங்களுட் சிறந்தவற்றை அரசாங்கத்தார் விலை கொடுத்து வாங்கிக் கலாபவனங்களிலும் சித்திரசாலைகளிலும் காட்சிக்கு வைப்பார்கள். சம்பந்தப்பட்ட தேசங்களின் யுத்த முயற்சிக்கு அறிகுறியாக இப்படங்கள் சேமித்து வைக்கப்படும். மேலும் சிறந்த படங்களை ஏகாதிபத்திய நாடுகட்குக் காட்சிக்காக அனுப்பி வைப்பார்கள். எனவே, பரிசுப்பணம் மாத்திரமல்ல; பெரும் புகழும் கிடைக்கக் கூடிய இவ்வரும் தருணத்தைச் சித்திரகாரர் இழந்து விடக்கூடாது.

இது சம்பந்தமான விண்ணப்பப் பத்திரங்கள் 1943-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ம் திகதிக்குப் பிந்தாமல் சமாச்சாரப் பகுதித் தலைவருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

ஆர். பட்ரிக்,
சமாச்சாரப் பகுதித் தலைவர்.

G 30 15-22.10. 42.

திருச்சி றேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

வெள்ளி அக்டோபர் 16

காலை: 7-45 தோத்திரம்† 7.50 தமிழில் செய்திகள் 8 நதிப்பாடல் † 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 கே. வி. நாராயணசாமி பாட்டு 9 முடிவு.

1 நிரைகானம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 கே. வி. நாராயணசாமி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 டி. வைத்தியநாதய்யர் பாட்டு 5-40 குரான்-இ-ஷரீப் 6 கே. சங்கரநாராயணபணிக்கர் நாகஸ்வரம் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 இலக்கியரசம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 புதிய குடித்தனக்காரன் நாடகம் 8 கே. சங்கரநாராயணபணிக்கர் நாகஸ்வரம் 8-45 டி. வைத்தியநாதய்யர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 உலக விவகாரங்கள் ஆங்கிலம் 10 திரை இசை† 10-30 முடிவு.

சனி அக்டோபர் 17

காலை: 7-45 தோத்திரம்† 7-50 தமிழில் செய்திகள் 8 பஜனை† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 மயவரம் வி. கிருஷ்ணமூர்த்திஐயர்வயலின் 9 முடிவு.

1 குருமலை லக்ஷ்மி பாட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஐரோப்பிய சங்கீதம்† 2 தமிழில் செய்திகள் 2-05 மாயவரம் வி. கிருஷ்ணமூர்த்தி ஐயர் வயலின் 2-30 முடிவு.

மாலை: 5 குருமலைலக்ஷ்மி பாட்டு 5-40 திருமொழி விளக்கம் பஜனை 6 சினிமா கீதம்† 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 செயல்முறை சிக்கனம் பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 மதராஸில் உள்ளபடி (துறையூர் எம். ராஜகோபாலசர்மா பாட்டு) 9 நாமகிலம்பு இசை நிகழ்ச்சி 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 கோட்டுவாத்தியம் 10 இசைவேளை† 10-30 முடிவு.

ஞாயிறு அக்டோபர் 18

காலை: 7-45 தோத்திரம்† 7-50 தமிழில் செய்திகள் 8 நதிப்பாடல்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8 25 எஸ்.கே. நாராயணசாமிபிள்ளை பாட்டு 9 முடிவு.

12 மனம் கலங்காதே† 12-30 ஒலி மலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 திருப்புகழ் 2 தமிழில் செய்திகள் 2-5 மாதர் குரல்† 2-30 முடிவு.

மாலை: 5 வி. எஸ். சோமசி சங்கரய்யர் வீணை 5-40 தேவாரத்தினை 6 எஸ். கே. நாராயணசாமிப்பிள்ளைபாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 சனிக்கயாட்டோம் பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 வானொலி வாத்ய கோஷ்டி 8 விஜயதசமி சங்கீத உபன்யாசம் 9 சர்வகலாசாலைகளுக்கு (ஆங்கிலப்பேச்சு) 9-15 ஐரோப்பிய சங்கீதம்† 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 வி. எஸ். சோமசி சங்கரய்யர் வீணை 10-30 முடிவு.

திங்கள் அக்டோபர் 19

காலை: 7-45 தோத்திரம்† 7-50 தமிழில் செய்திகள் 8 படப்பாட்டுகள்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 டி. என். ராசவன் நாகஸ்வரம் 9 முடிவு.

1 டாக்கி இசை† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி. டி. சரஸ்வதிபாட்டு 2 தமிழில் செய்திகள் 2-5 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 டி. என். ராசவன் நாகஸ்வரம் 5-45 இசைப்பயிற்சி 6 டி. டி. சரஸ்வதி பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 செய்திச் சித்திரம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 வானொலி வாத்யகோஷ்டி 8 பூசனூர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரி கோட்டுவாத்யம் 9-20 ஆங்கிலத்தில்செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 விபோவா ஜனரஞ்சகம் 10 கதம்பம் 10-30 முடிவு.

செவ்வாய் அக்டோபர் 20

காலை: 7-45 தோத்திரம்† 7-50 தமிழில் செய்திகள் 8 நதிப்பாடல்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 சிதம்பரம் ஜயராமன் பாட்டு 9 முடிவு.

1 டாக்கி மெட்டுகள்† 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே. கே. சிவராமன் வீணை 2 தமிழில் செய்திகள் 2-5 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 கே. சிவராமன்வீணை 5-45 இசைப்பயிற்சி 6 சிதம்பரம் ஜயராமன் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7.15 ஆர். ஜி. என். வி. ஆங்கிலப்பேச்சு 7-30 அறிவிப்புகள் 7.35 தமிழில்செய்திகள் 7-45 மதராஸில் உள்ளபடி 9 ராமுவும் சோமுவும் 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 புல்லாங்குழல் 10 இசைவேளை† 10-30 முடிவு.

புதன் அக்டோபர் 21

காலை: 7-45 தோத்திரம்† 7-50 தமிழில் செய்திகள் 8 திவ்யகீதம்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 வி. கே. வேலுகுட்டி நாயர் பாட்டு 9 முடிவு.

1 படப்பாட்டுகள்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 ஈரோடு என் ஆர் விஸ்வநாதய்யர் வயலின் 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 வி கே வேலுகுட்டிநாயர் பாட்டு 5-45 இசைப் பயிற்சி 6 ஈரோடு என் ஆர் விஸ்வநாதய்யர் வயலின் 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 டிரபால் சர்தினம் பேச்சு 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 பல்லவவிஜயம் நாடகம் 9 டிரபால் சர்தினம் ஆங்கிலப் பேச்சு 9-15 ஐரோப்பிய சங்கீதம்† 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 அமெரிக்க வாக்கு ஆங்கிலம் 10 கதம்பம்† 10-30 முடிவு.

வியாழன் அக்டோபர் 22

காலை: 7-45 தோத்திரம்† 7-50 தமிழில் செய்திகள் 8 சினிமாப் பாட்டுகள்† 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 எஸ் ராகநாதய்யர் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி கே கோவிந்தராஜுலு நாயுடு புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-5 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5 டி கே கோவிந்தராஜுலு நாயுடு புல்லாங்குழல் 5-45 இசைப் பயிற்சி 6 எஸ் ராகநாதய்யர் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்திவிளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 வானொலி வாத்யகோஷ்டி 8 செம்மை வைத்தியநாதபாகவதர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்துசெய்திகள் 9-45 இசை சினெட் 10 ஐரோப்பியசங்கீதம் 10-30 முடிவு.

சிவஞானபோத நூல்

(முதலாம்பக்கத் தொடர்ச்சி)

செல்வேலியிற் றோன்றியவர். திருவண்ணாமலை ஆதீனத்திற் சந்நியாசம் பெற்றவர். வடமொழியிற் சிவபோகசார முதலிய கிரந்தங்கள் பல இயற்றியவர். சிவஞான யோகிகள் திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து முனிவர். சுப்பிரமணிய தேசிகர் திருவாவடுதுறை ஆதீனத்துத் தலைவர்களுள் ஒருவர். சிரம்ப வழுதிய தேசிகர் சேதுமான்மியத்தைத் தமிழிற் செய்தவர். இந்தத் தொல்லாசிரியர்கள் எல்லோரும் ஒரே முகமாகக் கூறுகின்ற உண்மையைப் புறக்கணித்துவிட்டு, சிவஞானபோதம் மொழிபெயர்ப்பன்று என்னும் போக்கை அங்கீகரித்தல் விவேகமாகாது.

சிவஞானபோதத்துக்குச் சார்பு நூலாகிய சிவப்பிரகாசம் என்னும் சித்தாந்த சாஸ்திரம், "தெரித்தகுரு முதல்வருயர் சிவஞானபோதஞ் செப்பினர் பின்பவர் புதல்வர் சிவஞான சித்தி—விரித்தனர்" என ஓதுகின்றது. மதுரைச் சிவப்பிரகாசர் இதற்குச் செய்த வியாக்கியானத்தில்; "முற்பட்ட ஆசாரியரில் விசேடதத்துவத்தையுடைய மெய்கண்டதேவ தம்பிரானர் மேலான சிவஞானபோதமாகிய மூலக்கிரந்தம் பன்னிரண்டினுமுள்ள அர்த்தத்தைத் தமிழாக விரித்துப் பன்னிரண்டு சூத்திரமாக வகுத்து, அந்நூலின் பெயராலே சிவஞானபோதமென்று செய்தருளினர்" எனக் கூறியிருத்தலானும்,

"தெரித்த குரு முதல்வர்" என்ற அடி செய்யுளுக்கு வேறொரு பெரியார் செய்த உரையில் "இது அபரஞானமாகிய சிவாகமப்பொருளைத் தமிழ்ப்படுத்திய முறையும் பெயரும்....உணர்த்திற்று." "இந்தச் சம்பிரதாய உண்மையை முன்னம் விளக்கிய முதலாசிரியரான மெய்கண்டதேவ நாயனர் மேலான சிவஞானபோத மென்னும் ஸ்ரீநந்திகேசுர வாக்கியத்தைத் தமிழாக அருளிச் செய்தார். பின்பவருடைய சிஷரான அருணந்திதேவ நாயனர் அந்நூற் பொருளை விரித்துச் சிவஞான சித்தியாராக அருளிச் செய்தார்" எனக் காணப்படுகின்றமையானும் மெய்கண்டதேவர் மொழிபெயர்த்துரைத் தருளினரென்பது துணியப்படும்.

மேலும், மெய்கண்டதேவ நாயனர் பரம்பரையில் வந்த தத்துவப் பிரகாசர் தத்துவப் பிரகாசம் எழாவது செய்யுள் உரையில் "பரமசிவனிடத்துக் கேட்கப்பட்டு நந்திகேசுரநாதனர் அருளிச்செய்யப்பட்ட வடமொழிச் சிவஞானபோதமும், நன்னெறி வழியாக மெய்கண்டதேவ நாயனர் அருளிச் செய்யப்பட்ட தென்மொழிச் சிவஞான போதமும்" எனக் கூறப்பட்டது.

சைவராஜதானியாகிய திருவாவடுதுறை ஆதீனத்து ஞானகுருமூர்த்தியாய் எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகர் அருளிச் செய்த தசகாரியத்தில் "முன்னவன் வடநூலோதி மொழிந்த ஞானபோத மதற்கோன்—பின்னவனந் நூலைப் பெயர்த்தனன் சித்தியாக" எனவும், அவ்வாதீனத்து உலகுடைநாயனர் அருளிச் செய்த ஆசிரிய விருத்தத்தில், "முக்குமாசமத்தை யருட்டுறையண்ணன் மொழிபெயர்த்துரைத்த நூன்முதலா முதல்வழி சார்பா மூன்று நூற் கருத்து முறைதெரியாமலே கருதி...நிதியே" எனவும் வரும் செய்யுட்களும் சிவாகமம் முதனூலென்றும், அதன் வழித் தாயது தென்மொழிச் சிவஞான போத மென்றும், வலியுறுத்துகின்றன.

இன்னும் மறைஞான சம்பந்தர் அருளிச் செய்த அருணகிரிப் புராணத்தில்;

> வேதத்தினரும்பொருளை விமலனருணந்திக்குப்
> போதித்த சிவஞான போதத்தைக் குருமரபா
> லோதித் தேர்ந்தருந் தமிழா லெமக்குணர்த்தி யெம்மூனஞ்
> சேதித்த மெய்கண்ட தேவனடி சிந்திப்பாம்.

எனக் கூறப்படுவதாலும்,

> கச்சியப்ப முனிவர் அருளிச்செய்த விநாயக புராணத்தில்,
> சிற்பவாடியிற் பெரியமால்வரைப் பொருள் செறிந்தாக
> கதிவு நூல்களின் முடிவெலா மகப்படுத்தவற்றி
> னெறியெலாம் விளக்கிய சிவஞான போதத்தைக்
> குறிசெய்தித் தமிழாலுரை குரவனைப் பணிவாம்.

எனவும், தணிகைப்புராணத்தில்

> அருள்வளர் நந்திமேதகை விளக்கி
> யருள் சிவஞான போதத்தைத
> தெருள்வளர் தமிழ்செய்தளித்த மெய்கண்ட
> தேவன் சந்ததி விளங்க.

எனவும் கூறப்படுதலானும் சிவஞான போதத்தைக் குருமரபாற் பெற்று, எமக்குத் தமிழாற் றந்தருளியவர் மெய்கண்டதேவரே யாமென்பது சித்தித்தது.

> மைகண்ட மணிமிடற்றோன் விரித்த முன்னூன்
> மாபுணர்ந்து வழிநூலா வகுத்தே யுண்மை
> கைகண்ட சிவஞான போதந் தந்து
> கலைகளை வாழ்வித்துக் கடவுட் கொள்ளாப்
> பொய்கண்ட சமயமுதலாய பொல்லாப்
> புன்சமய கிளைகெடுத்த புரைதீர் வெண்ணெய்
> மெய்கண்ட குரவர் முதற் குரவர்பொற்றாள்
> விரைக்கமலப்போதுமுடி மீதுகொள்வாம்.

எனத் திருவாரூர்ப் புராணத்திலும்,

> சைவச் சந்தான நெறிதழைக்கத் தமிழ்நூல் செய்தோன்

எனத் திருவெண்காட்டுப் புராணத்தும்,

> ஒளிவொளி தழைகயிலைக்கிறைவனின் றருளு முண்மை நூலை
> யாவினி துறத்தமிழின் மொழிபெயர்த்த வாசிரியன்....

குவில்புகழ் மெய்கண்ட தேவனருட் சந்தானந் தழைக மாதோ எனச் சூதசங்கிதையிலும் வரும் செய்யுட்களும் மொழிபெயர்ப்பென்பதை நிறுவுகின்றன.

> திங்களொடு கங்கைபுனை யங்கணனுர் செப்புதிரு வருளினேடு
> தங்குருவாம் பரஞ்சோதி முனிவனினி தறைகுறிப்புத் தகவாக் கொண்டு
> தங்கமுத சிவஞானபோதமும் வார்த்திகப் பொழிப்புஞ் சுழிப்பு நீர் சூழ்
> திங்கமருந்தமிழ்நாடு விடுபெறப் புரிகுரவ சிருதான போற்றி.

என்றற் றொடக்கத்தனவாகும். திருகைலாச சந்தான குரவர்களின் தோத்திரங்களுள்ளே காணப்படும் இம்மெய்கண்டார் தோத்திரத்திலே, "தமிழ்நாடு விடுபெறச் சிவஞானபோதம் புரிகுரவர்" என்று காணப்படலால வடமொழியிலிருந்து தென்மொழியிற் சிவஞான போதம் மெய்கண்டாரால் இயற்றப்பட்டதெனப் பெறப்படும்.

கா. சுப்பிரமணியபிள்ளை என்பவர் "ஸ்ரீ மெய்கண்டார் செய்தருளிய ஞானநூலே சிவஞானபோத மென்று கொள்ள வேண்டுமேயன்றி நூல்தானே கைலாயத்திலிருந்து குவலயத்தில் இழிந்ததென்று கூற இடமில்லை" என்று கூறும் மேற்கூறப்பட்ட பிரமாணங்களானே மறுக்கப்பட்டொழிந்தமை காண்க. (தொடரும்)

தற்கால வானசாஸ்திர பண்டிதர்கள்

முதலாம்பக்கத் தொடர்ச்சி

வும் சமத்தவ முடையதாயிருத்தலை யறிந்தார். இதன்பின்னர் காலமும் (Time) இவ்வித முறையாலைக்கொண்டு அறியப்படத் தக்கதாகும் எனத் தீர்மானித்தார். அநேக நாட்களின்பின் அசைகுண்டுடைய (Pendulum Clock) நாழிகை வட்டமொன்றை இயற்றினர், இதன்பின்னர் இவர் அக்கரிலுள்ள ஓர் கோபுரத்திலேறி அங்கிருந்து வெவ்வேறு நிறையுடைய பொருட்களை ஒரே நேரத்தில், கீழ் விழும்படி விட்டபொழுது, அப்பொருட்கள் ஒருமித்து விழுவதை அவதானித்தார். இதனுல் பழுவுடைய பொருட்கள் முன்னதாகவும் பழுவற்ற பொருட்கள் பின்னதாகவும் விழுகின்றன என்னும் கொள்கையானது நீக்கப்படலாயிற்று. சிறிது காலத்தின்பின் படுவா கலாசாலையில (Padua University) உபந்நியாசகராக நியமனம் பெற்றுர். அங்கு இவர் கொப்பனிஷியஸ் என்பவரது கொள்கையையே நன்கு கற்பிப்பாராயினர்,

மக்டேபக்(Magdeburg)கிலுள்ள கண்வைத்தியர் லிப்பர் ஹீ (Lipperhey) என்பவர், பொருட்களைப் பெருப்பித்துக் காட்டும் பொருட்டுபயோகிக்கும் கண்ணாடிகளை கலிலியோ நன்கு ஆராய்ந்த பின்னர் 1609ல் தாமாக ஓர் தூரதர்சனியை இயற்றினர். இது பொருட்களை முப்பது மடங்கு பெருப்பித்துக் காட்டும் தன்மையுடையதாகும். தாம் இயற்றிய தூரதர்சினியைக் கொண்டு தமது நண்பர்களுக்கு வியாழனைச் சுற்றும் நான்கு உபக்கிரகங்களையும், கொபனிக்கஸ் என்பவர் சுக்கிரனுக்கு இருப்பதாக முன்னர்க் கூறிய கலைகளையும், பால்வீதி மண்டலம் லக்ஷக் கணக்கான நட்சத்திரங்களால் ஆக்கப்பட்ட தென்பதையும் காண்பித்தார். சந்திரனது மேற்பரப்பானது பூமியிலும் பார்க்கக் கரடு முரடான தென்பதையுமறிந்தார். இவையன்றி சூரியபிம்பத்தின்மேற் காணப்படும் கரும புள்ளிகளின் அசைவைக்கொண்டு சூரியனின் சுழற்சியையும் நிரூபித்தார். கலிலியோ எனபவரது கொள்கைகள் யாவும் அக்காலத்திலுள்ள தத்துவ ஞானிகளுக்கு மிகவும் கோபத்தை விளைவித்தன. ஆனுல் கலிலியோவென்பவர் இவர்களது மடமையை நிந்தித்துச் சிரித்தது மாத்திரமன்றி தமது ஒரே காலத்தவராகிய கெப்லர் எனபவருக்கும் இவர்களுடைய அறியாமையைப் பற்றி எழுதினர். 1615ல் எட்டாவது ஏபன் பேப்பாண்டவரும் (Pope Urban VIII) மற்றையோரும் கலிலியோ எனபவரது கொள்கைகள் யாவும் மதவிரோதமானதும் பிழையானதுமெனக் கூறி அவைகளை உலகத்தவர்கட்கு விளக்கப்படாதெனக் கலிலியோவுக்குக் கட்டளையிட்டார்கள். கலிலியோ அவர்களை நேர்முகமாகப் பரிகாசம் பண்ணியதுமன்றி 1632ல் சம்வாத முறையில் தோலமியினதும் கொபனிஷியனதும் கொள்கைகளைக் குறித்து "தோலமி கொப்பனிஷிய சம்பாஷணை" (Dialogues on the ptolemaic and Copernician System) எனனும் புத்தகத்தை வெளியிட்டார். ஆலயகர்த்தர்கள் இதனைக் கண்ட பொழுது மிக ஆத்திரமடைந்தது மன்றி கலிலியோ என்பவரை ஓர் நியாயசபைக்கு முன் அழைத்து விசாரணை செய்தார்கள். இதுவன்றி இனிமேல் அம்முறைகளைக் கைக்கொள்ளக் கூடாதென்றும், அவைகளை உலகத்தவர்கட்குப் பரப்பக்கூடாதென்றும், அவ்விதம் செய்யின் சித்திரவதை செய்வதாயும் பயமுறுத்திக் கூறினர். கூறினது மாத்திரமன்றி சத்தியமுஞ் செய்வித்தனர். இதன் பின்னும் கலிலியோவென்பவர் பலவகையான துன்பங்களையும் இகழ்ச்சிகளையும் இவர்களால் அடைந்தார். எனினும் இவர் தமது கொள்கையையே நிலைநாட்டுவாராயினர். 1636ம் வருடமளவில் இவரின் கட்பார்வையானது சிறிது சிறிதாகக் குறைந்து ஈற்றில் இல்லாமற் போய் விட்டது. இவ்வித நிலைமையிலிருக்கும் பொழுதும், தாம் அறிந்த அரிய விஷயங்களைத் தம் நண்பர்களுக்குக் கூறி அவற்றைப் புத்தகரூபமாக வெளியிடச் செய்தார். அவ்வாறு வெளியிடப் பட்ட நூல் "சக்திசாஸ்திர" (Dynamics)மாகும். 1542-ம் வருடம் தேகவியோகமாயினர்.

(வரும்)

கடிதம்

வேதாகம சைவ சித்தாந்தமும் தனித் தமிழ்ச்சைவசித்தாந்தமும்

திரு. க. சுவாமிநாதனவர்கள் இந்த இரண்டு கட்சியினரது கொள்கைகளையும் சிறப்பான ஆராயப் புகுந்தனர். இந்நோக்கங் கொண்ட அறிஞரை யாழ்ப்பாணத்தி லிப்பொழுது மிகவும் வேண்டப்படுவ தொன்றே. ஆனுல் சுவாமிநாதனவர்கள் கண்டமுடிபு ஆன்றோர் வாக்குடன் சேராது முரணி நிற்கின்றதே. வேதங்கள் சொல்வது ஒன்று ஆகமங்கள் சொல்வது இன்னென் றென்பதே இவர்கள் முடிபு.

> வேத மொடாகம மெய்யா மிறைவனூ
> லோதும் பொதுவுஞ் சிறப்பு மென் றுள்ளன
> நாதனுரை யவை நாடி லிரண்டந்தம்
> பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே

திருமூலர் திருமந்திரம் 3

வேதங்களைப் பிரமாணமாகக் கொண்டு சிவாகமங்களைப் பிரமாணமாகக் கொள்ளாத சைவசித்தாந்திகளெங்கணு மில்லை. ஆகமமே சித்தாந்த மென்றும் ஆகமாந்தமே சித்தாந்த மென்றும் பெரியோர் கூறுவர்.

> 'வேதநூல் சைவநூலென் றிரண்டே நூல்கள்.................... சிவாகமங்கள் சித்தாந்தமாகும்.'

1 சித்தியார்

வேதாகம சைவ சித்தாந்தத்தையே பொது பகுதியாகக் கொண்டு சென்ற ஆராய்ச்சி ஆகமத்தைத் தன் கட்சியிலிருந்து நழுவவிட்டதுமன்றி எதிர்க்கட்சியின முதல்நூலாகக் கண்டது. இது தனித்தமிழ்க் கட்சியினரது ஆதாரமற்ற கொள்கையை நன்கு புலப்படுத்துவதாகும். ஆகமங்களிலலையேல் அவர்கட்கு ஆதாரமில்லையே. என்செய்வோம் இவைகளும் வடமொழியிலுள்ளன. பிற்காலத்துச் சைவர்களாற் செய்யப்பட்டன வாகமங்களென்பதையும் திருமந்திர மேற்கோள் மறுப்பதைக் காண்க.

வேதாகமசைவ சித்தாந்தம் வடமொழி வேதங்களையும் ஆகமங்களையும் தமிழிலுள்ள தேவார திருவாசகங்களையும் சித்தாந்த சாஸ்திரங்களையும் இவைகட்கு மாறுகாத பிறநூல்களையும் பிரமாணமாகக் கொள்ளும். தனித்தமிழ்க் கட்சியினர் பிரமாணம பதினான்கு சித்தாந்த சாஸ்திரங்களும் பழந்தமிழர் கொள்கைகளென்ற வொன்றுமாகும். சித்தாந்த சாஸ்திரங்கள் அவர்கட்கும் பொதுவாகையால் பழந்தமிழர் கொள்கைகளே தனித்தமிழ்க் கட்சியினர் சமயக் கொள்கைக்குப் பிரமாணமாகத் தோற்றுகின்றன. வேதாகமங்களைப் பிரமாண நூல்களாகக் கொள்ளுஞ் சைவர்களுந் தமிழர்களே! பழந்தமிழர் வழிவந்தவர்களேயாகையால் அவர்கள் தங்கொள்கைகளும் இவர்கட்கு உரியனவே. எனவே தனித் தமிழ்ப்பிரமாண மொன்றுமே இவர்கள் சமயக் கொள்கைக்குப் பிரமாணமாகும். அபிமானம் பிரமாணமாகக்கொண்டு சமயக் கொள்கைகளை காட்டுவதெங்ஙனம்?

சி. நாகையா
10- 10-42.

புகைவண்டியிற் சச்சரவு

பிரயாணி ஒருவற்குப் பலத்த கத்திக்குத்து

வேருவிலை அக் 11

சென்ற புதன்கிழமை வேருவிலையிலிருந்து கொழும்புக்குப் போய்க்கொண்டிருந்த ரயிலில இரு பிரயாணிகளிடையே வாக்குவாதம் நடைபெற்றதன் காரணமாக ஒருவருக்குப் பலத்த கத்திக்குத்துக் காயங்க ளேற்பட்டன.

வேருவிலை ஸ்டேஷனில் ஹாராமணிஸ் தோமிஸ் சிங்ஙோ என்னுமொருவர் கொழும்பை நோக்கிப் பிரயாணமான ரயிலில் ஏறினர். ரயில புறப்பட்டதும் பிரயாணிக ளிருவருக்கு மிடையே வாக்குவாதம் ஆரம்பித்தது. அப்பொழுது தோமிஸ் சிங்ஙோ என்பவர் ஹாராமணிஸ் என்பவரைப் பலமாகக் கத்தியால் தாக்கியதாகச் சொல்லப்படுகிறது.

ஓர்பிரயாணி அபாயச் சங்கிலியை இழுக்கவே இடசென்று பையகலை தெற்கு ரயில்வே ஸ்டேஷனுக்குச் சமீபத்தில் ரயில் நிறுத்தப்பட்டது.

ஸ்தலத்துக்குச் சமீபத்தில் கடமை யாற்றிக் கொண்டிருந்த பையகலைக் கோன்ஸ்டபிள் ஒருவரும் அக்கிராமத்தைச் சேர்ந்த தலைமைக்காரரும் ரயிலிலிருந்த தோமிஸ் சிங்ஙோவைக் கைது செய்தனர்.

ஹாராமணிஸ் கழுத்துறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சைக்கிள் 'டயர்' விலைகள் அதிகரிப்பு

விலைக் கட்டுப்பாட்டுச் சட்ட விதிகளின்படி கட்டுப்படுத்தப் பட்டிருந்த சைக்கிள் 'டயர்கள்' விலையும் டியூப்புகளின் விலையும் திருத்தியமைக்கப்பட்டிருப்பதாகச் சென்ற வெள்ளிக்கிழமை வெளிவந்த கசெற் அறிக்கை யொன்று கூறுகின்றது.

இத் திருத்தத்தின் காரணமாக ஜூலை மாதம் 9-ந் திகதி விடுக்கப்பட்ட விலைத்தரவு நீக்கப்பட்டுச் சற்று அதிகமான புதிய விலைகள் நிர்ணயிக்கப் பட்டிருக்கின்றன. இவ்விலைகள் கட்டுப்படுத்தப்பட்ட ஆகக் கூடுதலான விலைகளாகும். இவ்விலைகளுக்கதிகமாக டயர்களையும் டியூப்புகளையும் விற்பனை செய்யக் கூடாது.

ஸ்ரீ விவேகானந்த வித்யாலயம் மட்டக்களப்பு

1-ம் பக்கத் தொடர்ச்சி

பாடலின்போது சிவபெருமான் திருநடனமிட்டகாட்சி மகா அற்புதம். இடையிடையே பாடப்பெற்ற சுவாமி சுத்தானந்த பாரதியவர்களின் பாடல்களும், மேற்படி வித்தியாசாலை இசையாசிரியன் எம். சிவபாலன் அவர்கள் வாசித்த வயலின் வாத்தியமும், சிறுபெண்களின் சத்தி நடனமும் குழந்தைப் பெண்கள் மழலை கலந்துபாடிய ஆங்கிலப் பாடல்களும் பரமானந்தமாயிருந்தன.

அட்டாளச்சேனை அரசினர் ஆசிரியகலாசாலை அதிபர் திரு. கல்லையா B. A. அவர்களின் குறிப்புரையின்பின் இலங்கை இராமகிருஷ்ணமிஷன் பாடசாலைகளின் தலைவர் சுவாமி சித்தானந்தஜீ அவர்களின் முடிவுரையுடன் கொண்டாட்டம் இனிது பூர்த்தியாயிற்று.

குறிப்பு:-

நம்நாட்டுச் சைவமதப் பெண் பாடசாலைகள் மேற்கண்டபடி சைவப் பெண்மணிகளின் புண்ணிய சரிதைகளை நடிப்பதிலும் சுத்தானந்தர் போன்ற அருட்பெரியார்களின் பாடல்களைப்பாடுவதிலும் ஆர்வங்காட்டி வருதல் வரவேற்கத்தக்கது. ஒவ்வொரு சைவப் பாடசாலையும் அதற்குரிய கொண்டாட்டங்களின் போதுகாட்டுக் கூத்தற் கும்மித்தா ஆட்டங்களுக்கும் இடங்கொடுக்காது சைவப் பெரியார்கள், கற்பரசிகள் போன்றுரின் அருட்சரிதைகளை நடித்தும் பாடியும் கொண்டாடல் சைவசமய விருத்திக்கு வெற்றிகரமான பிரசாரமாகும்.

இவ்விஷயத்தில் சைவ பாடசாலைகளிற் கற்பிக்கும் ஆசிரியர்களும் ஆசிரியைகளும் சிறிது கவனஞ் செலுத்தினுல் "நம்மவர்களின்-முன்னேர்களின்-சரிதங்களையே நடிக்கிறேம்; பாடுகிறேம்," என்ற உணர்ச்சி தோன்ற மாணவ மாணவிகளை நடிக்கவும் பாடவுஞ் செய்து நாடகக்கலைக்கும் இசைக்கும் வளர்ச்சியேற்படுத்துவதாய் சைவத்திற்கும் தொண்டாற்றுவதாகும்.

சமய சத்தியங்களை அறியாது புற ஆசாரங்களைமட்டும் அனுஷ்டித்துத் தாம் சைவரென எண்ணிக்கொண்டிருப்பவர்கள் நம்மிடையே அநேகர் உண்டு. இவர்களுக்காக நாம் அனுதாபப்படவேண்டும். சைவத்துள நிறைந்துள்ள அரிய உண்மைகளையும், அவைகளின் அருமைபெருமைகளையும் இவர்கள் அறியமுடியாதிருக்கின்றனர். சைவத்தைக்கட்டோணறிய அருட்பெரியார்களையும் அவர்கள் வாழ்க்கை வரலாற்றையும் இவர்கள் அறியமாட்டார்கள். சமய குரவர்களின் பெயர்களைத்தானும் கேட்டறியாதார்கள் எத்தனையோ பேர்கள்! கல்விப் பரிச்சயம் இல்லாமையால் இவர்கள் படித்தறியவும் முடியாதிருக்கின்றனர். இத்தகையோரின் அறிவு விருத்திக்குப் பிரதானமாகச் சமய அறிவுக்கு நாம் மேலே குறிப்பிட்டபடி சைவ மாணவ மாணவிகளும் ஆசிரியராசிரியைகளும் முயற்சியெடுத்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றனர்.

இங்ஙனம் இவர்கள் செய்வார்களாயின், சமயபோதகர்கள் போது ஜனங்களிடையே எளிதிற் புகுந்து சைவசமயம்பரக்கப் பரப்புவதோடே ஓரளவு சமயஅறிவும், தேறியும் கொண்ட சைவர்கள் எங்கும் காணப்படுவர்.

இப்படியான சேவையை நிகழ்த்தியதற்காக விவேகானந்த வித்தியாலய ஆசிரியராசிரியைகளுக்கும் மாணவிகளுக்கும் சைவ நன்மக்களின் சார்பாக நன்றி செலுத்துகிறேம்.

பத்திரக் கிரயம்

1942-ம் ஆண்டு ஏப்பிறில் மாதந் தொடக்கமாக
யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையார்
தாங்கள் நடாத்தும் இந்துசாதன ஆங்கில தமிழ்ப் பிரதிகட்குச்
சமயோசிதமாகப் பின்வருமாறு பத்திரக்கிரயத்தைச்
சிறிது உயர்த்தியுள்ளார்:-

இந்துசாதனம் தமிழ்ப்பிரதி,	வருடமொன்றிற்கு	பட்டின எல்லையுள்	6.50
,, ஆங்கிலப்பிரதி	,,	,,	6.50
இரு பிரதிகளுஞ் சேர்த்து	,,	,,	10.50
தமிழ்ப்பிரதி	,,	பிறவூர்கட்கு	9.50
ஆங்கிலப்பிரதி	,,	,,	9.50
இரு பிரதிகளுஞ் சேர்த்து	,,	,,	13.50

தனிப்பிரதி 7 சதம்

விளம்பர விகிதம்

முதன் முறைக்கு

ஒரு கலம் ரூபா 10-00	அரைக்கலம் ரூபா 5-50
கால் கலம் ரூபா 4-00	ஒரு அங்குலம் ரூ. 1-00

அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி

காலம் நீடித்த விளம்பரங்கள் விசேஷ விளம்பரங்கள் விஷயத்தில் மனேஜரிடம் நேரிற் கண்டேனும் எழுத்து மூலமாகவேனும் ஒழுங்கு செய்யலாகும். உடன்பணம் அனுப்பப்படாத விளம்பரங்கள் ஏற்கப்படமாட்டா.

தி மலாயன் டிரேடிங் கொம்பனி

(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்கள், சீமேந்துவகைகள்
விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்
"புரொப்ரைட்டர்" K. A. இரத்தினசிங்கம்
Y 19. 4-3-42—3-3-43

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரையுளது)

அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.
ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா
25ம் ஆதாயமும் பெறலாம்

வங்கித்தொழிலும் வியாபாரமும்
இலாபகரமாய் நடக்கின்றன.

தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.
இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறேம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும்
நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், கடைக்கணக்கிலும்
பணம் ஏற்றுக்கொள்வோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்!

வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.

(வி) (Y. 164. 1-11-41 to 31-10-42)

வெளிவந்துவிட்டது!

சைவ சித்தாந்த உண்மை

சைவ சித்தாந்த சாத்திரங்களைப் பயிலவிரும்பும் ஆங்கில மாணவருக்கு இந்நூல் பெரிதும் பயன்படக்கூடியமுறையில், "விஞ்ஞான சாத்திர அறிஞர்" ஒருவரால் இந்துசாதன ஆங்கிலப் பிரசுரத்திற் காலந்தோறும் எழுதி வெளியிடப்பெற்று வந்தது; இதனை இப்பொழுது யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையார் தொகுத்துப் புத்தகவடிவிற் பலர்க்கும்பயன்படும் வண்ணம் அச்சிட்டு வெளியிட்டுள்ளனர். இது பதினைந்து அதிகாரங்களைக் கொண்டது; திருவாளர் சு. சிவபாதசுந்தரமவர்கள் எழுதிய நான்முகத்தோடு கூடியது. 1'0 பக்கங்கள் வரையிற் கொண்டது. சைவமக்களெல்லாரும் இலகுவில் வாங்கிப் படிக்கவேண்டுமென்ற நோக்கம்பற்றிப் பிரதியொன்று விலைகுறைத்து 50 சதமென விதிக்கப்பட்டுள்ளது. பெறவிரும்புவோர், மனேஜர், யாழ்ப்பாணம் சைவப்பிரகாசயந்திரசாலை, வண்ணார்பண்ணை என்ற விலாசத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதானமான அறிவித்தல்

லைசென்ஸ்பெற்ற பல்லுக்கட்டுபவரும்
கண்பரிசோதகருமாகிய
மிஸ்டர். S. சாஸ் பத்திரண

இப்போது கிறைண்ட் சர்ச்சுக்கெதிரே மெயின்ஸ்ட்ரீட்டில் 43-ம் நம்பர் இல்லத்தில் இருக்கிறர்.

இவர் ஒவ்வொரு மாசத்திலும் 1-ந் திகதி தொடக்கம் 15-ம் திகதிவரை அங்கு இருப்பார்.

ஏனைய நாட்களில் பின்வரும்விலாசத்திற்குக் கடிதங்களை அனுப்புக
தம்பராவத் தோட்டம், வரியப்பொலா, வடமேல்மாகாணம்.

Y115 18-8-42—17-11-42

> வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
> கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
> நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
> மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்,

Printed and Published by Pandit V. T. Sambandhan, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna, on Thursday 15th October, 1942